Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

INTERNET BROWSING
உங்கள் கனவுகளை நனவாக்கும் விதத்தில் (Global Informatics) நிறுவனத்தின் மிகக்குறைந்த கட்டணத்தில் 1 hour - 50/= உங்கள் இணையத்தளத் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ளமுடியும் என்பதை அறியத்தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.
gi@netcafe
Internet Browsing Center
Global Informatics (pte) Ltd.
379, Kasthuriyar Road, Jaffna.
Tel - 077 7364247, 021 222 5735-6
(சி-866)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 சித்திரை 29 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.அவ்வல் 09 (12.05.2003) திங்கட்கிழமை இதழ் : 220

# குமாருக்கான 'மாமனிதர்' விருது; தலைவர் பிரபா வழங்கினார்!



குமாருக்கான 'மாமனிதர்' விருதின் மூல ஆவணத்தை, தேசியத் தலைவர் பிரபாகரன் - குமார் பொன்னம்பலத்தின் துணைவியாரிடம் வழங்குகின்றார்.



தேசியத் தலைவருடன் குமாரின் மகள், துணைவியார், மகன் கஜேந்திரகுமார்.

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் - 'மாமனிதர்' குமார் பொன்னம்பலம் குடும்பத்தினருக்கு, 'மாமனிதர்' விருதையும், ஆவணத்தையும் வழங்கிக் கௌரவித்தார்.

இது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை நடுவப்பணியகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

தமிழ் மக்களுக்கு வழங்கிய அயராத சேவையைப் பாராட்டி, தமிழீழத் தேசியத் தலைவர் - உயிர்த்தியாகம் செய்த அமரர் குமார் பொன்னம்பலத்திற்கு ஏற்கனவே 'மாமனிதர்' பட்டம் வழங்கிக் கௌரவித்திருந்தார். தமிழீழத் தேசியத் தலைவர் - அன்னாரது குடும்பத்தினரைச் சந்தித்து மாமனிதர் என்ற கௌரவம் வழங்கிய மூலஆவணத்தையும், 'மாமனிதர்' விருதினையும் வழங்கினார்.

குமார் பொன்னம்பலம் - பயங்கரவாதத் தடைச்சட்டமும் அவசரகாலச் சட்டமும் தமிழ் மக்களுக்கு எதிராக அரசினால் மிகக்கொடூரமான முறையில் பிரயோகிக்கப்பட்ட வேளையில் - அதனை எதிர்த்து, தமிழ் மக்களின் உரிமைக்காக தலைநகர் கொழும்பிலும் சர்வதேச மன்றுகளிலும் குரல்கொடுத்து, அதன் விளைவாகப் பகைமை தேடி சதிகாரர்களால் கொல்லப்பட்டார்.

அமரர் குமார் பொன்னம்பலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்பாதுகாப்பு அறிக்கையோடு ஜேக்கப் வருகிறார்

கடற்கண்காணிப்புத் தொடர்பான அறிக்கையுடன், இந்தியாவின் முன்னாள் கடற்படைப் பிரதித் தலைமை அதிகாரி ஏ.ஜே.ஜேக்கப் இன்று கொழும்பு வரவுள்ளார்.

இவர் கடந்தமுறை கொழும்பு வந்திருந்தபோது, அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ், கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, வட - கிழக்குப் பகுதி கடற்படைத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# பாலாவுக்கு திடீரென சுகவீனம்; லண்டன் புறப்பட்டுச் சென்றார்!

## கிளிநொச்சியிலிருந்து நேற்று ஹெலியில் கொழும்பு பயணம்



ஹெலி தரையிறங்கக் காத்திருக்கும் பாலா, திருமதி அடேல் மற்றும் பிரமுகர்கள்.

(கிளிநொச்சி)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம், திடீரெனச் சுகவீனமுற்றதையடுத்து நேற்று கிளிநொச்சியிலிருந்து லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றார். விமானப்படை ஹெலிகொப்ரர் மூலம் நேற்று பி.ப. 2 மணிக்கு, கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மற்றும் அவரது துணைவியார் அடேல் பாலசிங்கம் ஆகியோர் கிளிநொச்சி மத்திய விளையாட்டரங்கில் இருந்து கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றனர்.**

இவர்களுடன் 'சண்டே லீடர்' பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவும் சென்றார். இவர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்திடமிருந்து பேட்டி ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக கிளிநொச்சிக்குச் சென்றிருந்தபோதும் - கலாநிதி அன்ரன் பாலசிங்கத்திற்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டதால் இப்பேட்டி நிகழ்வு இடைநிறுத்தப்பட்டது.

இதேவேளை - பாலா தம்பதியினர் பயணம்செய்த ஹெலி, கிளிநொச்சியிலிருந்து புறப்பட்ட சற்று நேரம் கழித்து - சீரற்ற காலநிலையால் தொடர்ந்து பறக்கமுடியாமல், அனுராதபுரத்தில் தரையிறக்கப்பட்டது. சுமார் 2 மணிநேரம் அங்கு தங்கியிருந்த பாலா தம்பதியினர், பின்னர் வேறொரு ஹெலி மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை அடைந்தனர். (10 ஆம் பக்கம் பார்க்க)



தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் பிரியாவிடையளிக்க, அன்ரன் பாலசிங்கம் தம்பதியினர் கிளிநொச்சியிலிருந்து ஹெலிகொப்ரரில் புறப்படுகின்றனர்.

# சந்திரிகாவைப் பதவிநீக்க நாடாளுமன்றில் பிரேரணை!

## உயர்குழுவை பிரதமர் ரணில் நியமித்தார்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை பதவி நீக்குவது தொடர்பாக ஆராய, மூன்று பேர் கொண்ட உயர் மட்டக்குழுவொன்றைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.

அமைச்சர்கள், கே.என்.சொக்ஸி, திலக் மாரப்பன, ஜி.எல்.பீரிஸ் ஆகியோரே இந்தக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

ஜனாதிபதியைப் பதவிநீக்கம் செய்வது தொடர்பாக நம்பிக்கையில்லாப்பிரேரணையைக் கொண்டுவரும் முயற்சியில் அமைச்சர்கள் எஸ்.பி.திஸநாயக்க, ரவிகருணாநாயக்க, எம்.எச்.முகமட், ஏ.ஆர்.எம்.காதர், டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார, பந்துல குணவர்த்தன, கருணாசேன கொடித்துவக்கு ஆகியோர் தீவிரமான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - இதுதொடர்பாக ஐ.தே.கவுக்குள் முரண்பாடுகள் ஏற்

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290
(சி.913 )

# உலக இந்து மகாநாட்டை ஒட்டி

எமது பாரம்பரிய இசைக் கருவிகளை அழியவிடாது பாதுகாப்பதற்காக, இவற்றைத் திருத்தும் மொத்தச் செலவில் 30% - 40% வரையான தொகையைப் பொறுப்பேற்க எமது நிறுவனம் முன்வந்துள்ளது. திருத்தமுடியாதவை கொள்வனவு செய்யப்படும்.

**40% இலவசம் 30.06.2003 வரை**

T.P இல. 2225448

தொடர்பு:
தலைவர்,
கலை கலாசார சமூக மேம்பாட்டு நிறுவனம்,
இல 77, வழக்கம்பரை வீதி
தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்,
யாழ்ப்பாணம்.

(340)



# கரித்தாஸ் ஸ்ரீலங்கா கியூடெக் யாழ்ப்பாணம்
நடாத்தும்

## தேசிய மட்டத்திலான
## நாடகப் போட்டி/ தொலைக்காட்சி நாடகப் போட்டி (VIDEO)

கரு:-
- ★சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம்
- ★சிறுவர் கல்வி
- ★குழந்தைத் தொழிலாளர்
- ★வீதிச் சிறார்கள்

மேற்கூறிய ஒரு கருவை மையமாகக் கொண்டு போட்டியில் எவரும் பங்குகொள்ளலாம்.

**போட்டி விதிகள்:-**

- ★ நேரம் - 15 நிமிடம் முதல் 20 நிமிடம் வரை
- ★ நாடகப் பிரதிகள் 3 விண்ணப்பத்துடன் அனுப்பவும்
- ★ தனது சொந்தத் தயாரிப்பு என்றும் வேறுபோட்டிகளில் மேடை யேற்றப்படவில்லை எனவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- ★ நாடகத்தில் 10 பேர்வரை பங்குபற்றலாம்.

தொலைக்காட்சி (VIDEO) நாடகப் போட்டிக்கும் மேற்கூறிய விதிகள் பொருந்தும். இரு போட்டியிலும் வெவ்வேறு விண்ணப்பங்களில் விண்ணப் பிக்கலாம்.
VIDEO தயாரிப்புக்களை 20 ஜூலை 2003 இற்கு முன் அனுப்பிவைக்கவும்.

சிறந்த நடிகர், நடிகை, இசை, உடை அலங்காரம், மேடை அமைப்புடன் மூன்று நாடகங்கள் தேசிய மட்டத்தில் தெரிவுசெய்யப்படும். யாவற்றிக்கும் பரிசுகள் உண்டு.

நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது.

சிறப்பு விருதுகளும், பணப் பரிசில்களும் உண்டு.

**விண்ணப்ப முடிவு திகதி:
25.05. 2003 இற்கு முன் விண்ணப்பிக்கவும்**

வினன்ணப்பிக்கவேண்டிய முகவரி:
கரித்தாஸ் - கியூடெக் - யாழ்ப்பாணம்
14, தியோகு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-922)


## பச்சிலைப்பள்ளி மாணவருக்கு சீருடை முத்திரை

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவை, நிரந்தர வசிப்பிடமாக கொண்டு, யாழ்.மாவட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான சீருடை, முத்திரை விநியோகம் நடைபெறும் இடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சியில் - நாளை செவ்வாய்க்கிழமை பளை ப.நோ.கூ.சங்க நெல்லியடிக் கிளையிலும், யாழ்ப்பாணத்தில் - 15 ஆம் திகதி வியாழக்கிழமை இல. 159 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்திலும் இவை விநியோகிக்கப்படவுள்ளன.

குறித்த தினங்களில் சீருடை முத்திரைக்கு விண்ணப்பித்து பெறாதவர்கள் தவறாது இவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

## உலக இந்து மாநாட்டு சிறப்பு நிகழ்ச்சி

இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு, அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலை கந்தசாமி கோவிலில் எழுச்சி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் தமிழ்நாட்டிலிருந்து வருகைதந்த, மதுரை உருமு தனலட்சுமி கலைக் கல்லூரி பேராசிரியர்களான - கலாநிதி ஆர்.ரவிச்சந்திரன், கலாநிதி ஆர்.சுந்தர் ஆகியோரது சமயச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன. (128)


**ராஜா** யாழ்ப்பாணம்.

இலங்கையிலும், இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடு
இளைய தளபதி விஜய்,
மீராஜஸ்மின் நடித்த



**புதிய கீதை**

10.30, 2.30, 6.30, 9.30

(சி-884)



**நிறைஞ்சனாஸ்** சங்கானை

அஜித், சிம்ரன், கவுண்டமணி நடித்த

**அவள் வருவாளா**

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு (இரவு 8.45)

**HANNIBAL**

(சி-882)


# நகரசபை, சாவகச்சேரி
# கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் 05-06-2003 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அதேதினம் 10.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

நிர்மாணப்பயிற்சி நிலையத்தில் (இக்ராட்) 'தரம் எம் 9' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு பெற்ற ஒப்பந்தகாரர் மாத்திரமே கேள்விப்பத்திரங்கள் கோருவதற்கு தகைமையுடையவராவார்.

ஒப்பந்தப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப்பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப்புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் ரூ | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூ |
|---|---|---|
| 01. நூலகத் தளபாடம் செய்து வழங்குதல் (தொகுதி 1) | 2500.00 | 600.00 |
| 02. நூலகத் தளபாடம் செய்து வழங்குதல் (தொகுதி 2) | 2000.00 | 600.00 |
| 03. வீரக்கொடியார் ஒழுங்கை கிரவலிடல் வட்டாரம் 5 - 600' | 500.00 | 600.00 |
| 04. வாகையடி ஒழுங்கை கிரவலிடல் வட்டாரம் 4 - 1400' | 1500.00 | 600.00 |
| 05. தேவாலய வீதி கிரவலிடல் வட்டாரம் 5 - 2400' | 1800.00 | 600.00 |
| 06. ஈச்சந்தாழ்வயல் ஒழுங்கை கிரவலிடல் வட்டாரம் 1 - 900' | 1000.00 | 600.00 |
| 07. சங்கத்தானை 2 ஆம் ஒழுங்கை தாரிடல் வட்டாரம் 9 - 1280' | 3000.00 | 600.00 |
| 08. பங்களா வீதி தாரிடல் வட்டாரம் 1 - 2100' | 5000.00 | 600.00 |
| 09. தாளையடி அம்மன் கோவில் வீதி கிழக்கு 2 ஆம் ஒழுங்கை தாரிடல். வட்டாரம் 6 - 800' | 2000.00 | 600.00 |
| 10. கலைமகள் பாலர் பாடசாலை மீள்நிர்மாணம் வட்டாரம் 5 | 2500.00 | 600.00 |
| 11. பஸ் நிலையக் கடைகள் திருத்தம் | 4000.00 | 600.00 |
| 12. பொதுச்சந்தையில் தகரக்கொட்டகைகள் இரண்டு அமைத்தல் - 50' நீளம் | 2000.00 | 600.00 |

கேள்விப்பத்திரங்களை சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் 30.05.2003 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை மேற்குறித்த கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப் படிவக் கட்டணத்தையும் செலுத்துவதன்மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதி "செயலாளர், நகர சபை, சாவகச்சேரி" என்ற முகவரிக்கும், இணைப்பிரதி 'பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கும் 05.06.2003 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்பு கிடைக்ககூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடவேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

நகரசபை அலுவலகம்.
சாவகச்சேரி.
12.05.2003.

(சி-926)

செயலாளர்,
நகரசபை,
சாவகச்சேரி.

# அரசாங்க கேள்வி அறிவித்தல் - 2003

## கணனி, கணனியுடன் தொடர்புடைய கணனிப் பொருட்களை கொள்வனவு செய்தல்

மனிதவள அபிவிருத்தி தொழில்சார் பயிற்சி நெறிக்காக இதன் கீழ்க்குறிப்பிடப்படும் கணனி, கணனியுடன் தொடர்புடைய பொருட்களை வழங்குவதற்கு ஆர்வம் உள்ளவர்களிடம் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

### கணனிகள் (COMPUTERS)

இதன் கீழ்க்குறிப்பிடப்படும் கணனித் தொகுதிகளை (Computer systems) உடையதாக கணனி இருத்தல் வேண்டும்.

1. ATX 340W Tower casing (PIV)
2. MSI or Gigabyte or AUSUS PIV MB with Intel Chipset
3. 256 or 128 MB DDR RAM or SDRAM
4. 32 MB AGP VGA Display Adepter, SIS or MSI
5. 40GB or 60 GB Hard disk - Sigate or Maxtor
6. 3.5" Floppy Disk drive - Samsung
7. Win 95 Key Board - Ps/2- Logitech or any good brand
8. Mouse PS/2 - Logitech or any good brand
9. 52x CD Rom - Sony or Samsung
10. Multimedia Speaker system
11. PIV - 1.7 or 1.8 GHZ Intel Processor
12. 512 cache
13. 15' color Monitor - CRT - Samsung or LG
14. PCI sound card - Creative live Value or ALS 4000
15. AGP & 5PCI Slot
16. 2USB, 2 Serial & 1 Parallel

### இடையறாத மின்வழங்கிகள் (UPS LINE INTERACTIVE)

650 VA - Fenton
600VA - Power Tree or Prolink

### அச்சடிப்பான்கள் (PRINTERS)

Dot Matrix - Epson LQ 300
Epson LQ 2180

Bubble Jet - Cannon BJC 2100 sp
Cannon BJC 100 sp

DeskJet - HP 3325
HP 3420

Laser - HP 1200

### தரவு நிழல் மாறா உள்வாங்கிகள் (SCANNERS)

Cannon Lide 20 or Lide 30

கணனி மேசைகள் (சாதாரணம்) (Computer Tables ( ordinary))
கணனி கதிரைகள் (சாதாரணம்) (Computer Chairs (ordinary))

மீளளிக்கமுடியாத வைப்பாக ( கேள்விக் கட்டணம்) ரூபா 500/- வேலை நாட்களில் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புக் கணக்காளரிடம் செலுத்தி கேள்விப்படிவத்தையும் கேள்வி ஆவணத்தையும் 2003.05.27 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம்.

03. மீளளிக்கக்கூடிய வைப்பாக ரூபா 5000/- (கேள்வி முறி) ஐ மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள இலங்கை வங்கியில் அரச அதிபர், இலங்கை வங்கிக் கணக்கு இலக்கம். 0005-08-0000043 இற்கு செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம்.

04. கேள்விகள் தலைவர் / அரசாங்க அதிபர், கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என 9X4 அளவுடைய கடிதஉறையில் முகவரியிடப்பட்டு 2003.05.28 ஆம் திகதியன்று பி.பகல் 2.00 மணிக்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக பதிவுக்கடிதம் மூலம் அனுப்பப்பட வேண்டும் அல்லது கணக்காளருடைய அறையில் உள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாகவும் போட்டுக் கொள்ளலாம்.

செ. பத்மநாதன்
தலைவர் / அரசாங்க அதிபர்,
கேள்விச்சபை,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

(சி-924)

# UNIVERSITY OF JAFFNA
## Tender Notice

The Chairman, Tender Board, University of Jaffna will receive sealed tenders from contractors registered with (ICTAD) for civil Engineering works for the, Construction of soakage pits/ filter beds at University of Jaffna.

Tender forms may be obtained from the works Engineer (Civil), Universtiy of Jaffna until 21.5.2003 on producing registration book and receipt for the cash payment for the following tender fees at the shroff's counter of University of Jaffna.

1. Refundable deposit - Rs. 2000/=
2. Non - refundable deposit - Rs. 300/=

Perfected tenders to be sent to reach the Chairman, Tender Board, University of Jaffna or deposited in the tender box kept at the Registrar's office, University of Jaffna on or before 27.5.2003 at 10.00 a.m.

Tender forms may be inspected by the tenderers free of charge at the planning Branch of this University during office hours if necessary.

Registrar,
University of Jaffna.

(சி-923)

P.O. Box 57,
Thirunelvely,
Jaffna.

# ரோக்கியோ மாநாட்டுக்கு புலிகள் செல்வது அவசியம்

## ஐரோப்பிய யூனியன் எம்.பி குஷ்நகன் கோரிக்கை

தமிழீழ விடுதலைப் புலிகள்-ரோக்கியோவில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பங்கேற்கவேண்டியது மிகவும் அவசியம் என்று ஐரோப்பிய யூனியன் நாடாளுமன்ற உறுப்பினர் குஷ்நகன் கேட்டுள்ளார்.

புலிகள் - ரோக்கியோ மாநாட்டில் கலந்துகொள்ளாமல் விட்டால், சர்வதேச நாடுகளுக்கு அது தவறான அர்த்தத்தைக் கொடுக்கும். இது ஒரு தவறான தந்திரோபாய உத்தியாகவும் வெளிநாடுகளால் பார்க்கப்படும்.

அத்துடன், விடுதலைப் புலிகளுக்குச் சமாதானத்தில் நம்பிக்கையில்லை என்ற நிலையை வெளிநாடுகள் மத்தியில் ஏற்படுத்திவிடும். இதனால், புலிகள் ரோக்கியோ மாநாடுக்கு வரவேண்டியது அவசியமாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளை நாட்டுக்குள்நுழைய அனுமதிக்க மாட்டோம் என்று அமெரிக்கா எடுத்திருந்த முடிவோடு நான் இணங்கவில்லை. கடந்த மாதம் வொஷிங்ரனில் நடைபெற்ற உதவிவழங்கும் நாடுகளின் முன்னோடி மாநாட்டுக்குப் போகமுடியாததையிட்டுப் புலிகள் மிகவும் வருத்தமடைந்திருக்கின்றனர்.

தாங்கள் தனிமைப்படுத்தப்பட்டுவிட்டோம் என்று அவர்களுக்கு மன வருத்தம். அந்த மனஉணர்வில் - புலிகள் அமைதி நடவடிக்கையில் இருந்து தற்காலிகமாக விலகியிருக்கிறார்கள்.

தற்போதுள்ள கண்காணிப்புக் குழுவை மீளாய்வு செய்யவேண்டும். தற்போது இதில் 47 பேர்தான் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அதுபோதாது. அதுவும் ஆறு மாதங்கள் மட்டுமே இவர்கள் இலங்கையில் தங்கியிருக்கின்றனர். பின்னர் புதியவர்கள் நியமிக்கப்படுகின்றனர். போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க இன்னும் அதிகமானவர்கள் தேவை. இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், இலங்கைக்கு வழங்கப்படுகின்ற உதவிகள் சரியாகப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யவும் இன்னும் பல கண்காணிப்பாளர்கள் வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.



நெடுந்தீவில் சேவையில் ஈடுபடுத்துவதற்காக பஸ்வண்டியை ஏற்றிவந்த தரையிறங்குகலத்தைப் படத்தில் காணலாம். இக்கலம் கரையை அண்மிக்க முடியாததால் பஸ்வண்டியை இறக்காமலே திரும்பிச்சென்றது குறிப்பிடத்தக்கது.

# அம்பாறைக்கு விமான சேவை ஜூன் மாதம் முதல் நடத்தப்படும்!

நாட்டின் சமாதானச் சூழ்நிலையைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி, அம்பாறை மாவட்டத்தில் உல்லாசப் பயணத்துறையை ஊக்குவிக்க அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

உல்லாசப் பயணிகளைக் கவர்ந்து இழுப்பதற்கும், உள்நாட்டு - வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்காகவும் எதிர்வரும் ஜூலை மாதம் முதல் அம்பாறைக்கான விமான சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருவதாகவும் தெரியவருகிறது. அத்துடன், கோமாரி விமானத் தளத்தையும் புனரமைக்கும் திட்டங்களும் அரசாங்கத்திடம் இருப்பதாகவும் தெரியவருகிறது. கோமாரி விமானத் தளம் இரண்டாம் உலகயுத்த காலத்தில் பிரிட்டிஷ் படைகளால் பயன்படுத்தப்பட்டதாகும்.

நாட்டின் பல்வேறு பகுதிகளையும் இணைக்கும 12 உள்ளூர் விமான சேவைகளை நடத்தவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

# லொத்தர் சபை பொறுப்பேற்பு; ஜனாதிபதி ஆணை செல்லும்!

## ஜனாதிபதி செயலகப் பேச்சாளர் அறிவிப்பு

அரசாங்க அச்சகத்தைச் சீல் வைத்து மூடியதால் லொத்தர் சபையை ஜனாதிபதி கையேற்பதான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படாமல் உள்ளது. இதனால் ஜனாதிபதியின் ஆணை செல்லுபடியாகும் தன்மைக்குக் குந்தகம் ஏற்படவில்லை என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகப் பேச்சாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி இந்த ஆணையில் கையெழுத்திட்டதும் அது செல்லுபடியான தன்மையை அடைந்துவிட்டது. இந்த ஆணை, வர்த்தமானி மூலம் வெளியிடப்படாமல் தடுக்கப்பட்டது தொடர்பாக அரசாங்க அச்சகம் மற்றும் ஊடக அமைச்சு என்பனவற்றிடம் இருந்து விளக்கம் கோரப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# புலிகளுடனான பேச்சுக் குறித்து நோர்வே குழு ரணிலுக்கு விளக்கம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுக்கள் தொடர்பாக நோர்வே தூதுக்குழுவினர்-பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் எடுத்துக் கூறினர்.

நேற்று முன்தினம் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த நோர்வே விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் மற்றும் இலங்கைக்கான நோர்வே தூதுவர் பிறட்ஸ்கர் ஆகியோர் புலிகளுடன் நடத்திய பேச்சுக்கள் குறித்து விபரித்தனர்.

கடந்த எட்டாம் திகதி கிளிநொச்சிக்கு விஜயம் செய்த எரிக் சொல்ஹெய்மும், பிறட்ஸ்கரும் - விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மற்றும் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோரைச் சந்தித்துப் பேசியிருந்தனர்.

இந்தப் பேச்சுக்கள் தொடர்பாகவே பிரதமருக்கு விளக்கிக் கூறப்பட்டது.

புலிகள் பேச்சுக்களிலிருந்து தற்காலிகமாக விலகிக்கொள்வதாக அறிவித்ததற்கான காரணங்கள் பற்றியும் நோர்வே தூதுவர்கள் பிரதமருக்கு விளக்கிக்கூறினர்.

அத்துடன், கடற்புலிகளின் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து கடற்புலிகளின் சிறப்புத் தளபதி தெரிவித்த கருத்துக்களையும் அவர்கள் பிரதமரிடம் எடுத்துக் கூறியிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கருத்துத் தெரிவிக்கையில் - புலிகளுக்கு நம்பிக்கையீனங்கள் தோன்றுவதற்குக் காரணமான சிறான் அமைப்பைச் செயற்படுத்துவதற்கான நிதியின்மையைச் சீர்செய்ய மீள் ஒழுங்குகள் செய்யப்படும் என்று குறிப்பிட்டார்.

# கூட்டமைப்பு எம்.பிக்கள் கிளிநொச்சிக்குச் செல்வர்

விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுக்களில் இருந்து தற்காலிகமாக விலகுவதாக எடுத்துள்ள முடிவு குறித்து ஆராயத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் வன்னிக்குச் செல்லவுள்ளதாகத் தெரியவருகிறது.

கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, தமிழ்க் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ் 'சுரேஷ் அணி' ஆகிய கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களே நாளை செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி செல்லவுள்ளனர். இவர்கள் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பிரமுகர்களைச் சந்தித்துப் பேசவுள்ளதாகத் தெரியவருகிறது. (09)

# வன்னிக்கான எரிபொருள் மட்டுப்படுத்தப்பட்டது!

வன்னிப் பகுதிக்கான எரிபொருள் விநியோகத்தைப் படையினர் மட்டுப்படுத்தியிருப்பதாகத் தெரியவருகிறது.

விளக்குவைத்தகுளம் சோதனைச் சாவடி ஊடாக நாளொன்றுக்கு ஆறாயிரம் லீற்றர் பெற்றோலை மட்டுமே எடுத்துச்செல்ல முடியும் என்று படையினர் கட்டுப்பாடு விதித்துள்ளனர்.

இதனால், வன்னிப் பகுதியில் வாகனங்களுக்கான எரிபொருள் போதாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# சமாதான முயற்சிகளை விரைவுபடுத்த உண்ணாவிரதமும் - பிரார்த்தனையும்!

(யாழ்ப்பாணம்)

தற்போதைய சமாதான முயற்சிகளை விரைவுபடுத்தக்கோரி, 'கியூடெக்' சமாதான உயிர்ப்பூட்டல் குழுவினரால் எதிர்வரும் சனிக்கிழமை அடையாள உண்ணாவிரதமும், அமைதிப் பிரார்த்தனையும் நடாத்தப்படவுள்ளது.

யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலுள்ள புனித யுவானியார் ஆலய வளவினுள் சனிக்கிழமை காலை 9.30 மணியிலிருந்து 3.30 மணிவரை இடம்பெறும் இந்நிகழ்வில், கத்தோலிக்க மதகுருக்கள் கருத்துரை வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வை - யாழ். மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை நிறைவு செய்துவைப்பார்.

# ஜனாதிபதியை எதிர்க்கும் பலம் ஐ.தே.க அரசுக்கு இருக்கிறது

## பிரதமர் ரணில் கூறுகிறார்



(கொழும்பு)

தேசிய லொத்தர் சபையைக் கையேற்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எடுத்துள்ள முடிவுக்குக் கூறப்படும் காரணங்களை ஒருபோதும் தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாதெனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பிலியந்தலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர் - மேலும் தெரிவித்ததாவது,

தேசிய லொத்தர் சபையைக் கையேற்பது தொடர்பாக ஜனாதிபதியுடன் ஏற்பட்டுள்ள பிரச்சினையை அரசாங்கம் பேச்சுக்கள் மூலமே தீர்க்க முயற்சிக்கிறது.

பலவந்தமாக சந்திரிகா லொத்தர் சபையைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததை எதிர்த்துத் தீர்மானம் கொண்டுவர அரசாங்கத்துக்குப் பலம் உள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா கூறுவது போல - அரசாங்கம் லொத்தர் சபையைத் தனியார்மயமாக்க திட்டமிடவில்லை. இதனால், ஜனாதிபதி தனது முடிவை மாற்றிக்கொள்ள வேண்டும்.

லொத்தர் சபையைப் பொறுப்பேற்கும் அறிவிப்பை அவர் ரத்துச் செய்யவேண்டும். இல்லையேல் ஜனாதிபதிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தேவையான ஆற்றல், அதிகாரம், சக்தி அனைத்துமே ஐ.தே.க அரசாங்கத்துக்கு இருக்கிறது.

ஆனால், அதைப் பயன்படுத்தி இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற இப்போது விரும்பவில்லை. ஜனாதிபதிக்கு மக்கள் எந்த ஆணை வழங்கினார்களோ, அதேபோன்றுதான் எமக்கும் ஆணை வழங்கியுள்ளார்கள்.

இதனால் ஜனாதிபதி தனது முடிவுகளை மக்களின் சார்பில் எடுக்கவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# க.பொ.த. (சா/த) பரீட்சை ஐந்து வருடப் பெறுபேறுகளை மீளாய்வு செய்ய நடவடிக்கை!

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்குக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய கடந்த ஐந்து வருடகாலத்தில் வெளிவந்த பரீட்சைப் பெறுபேறுகளும் மீளாய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளன.

மொழி, கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், சமூகக்கல்வி போன்ற முக்கியமான பாடங்களில் அதிக எண்ணிக்கையான மாணவர்கள் சித்தியடையத் தவறியமையே இதற்கான காரணமாகும்.

பரீட்சைப் பெறுபேறுகளை மீளாய்வு செய்வது சம்பந்தமாக விசேட கலந்துரையாடல் ஒன்று கல்வி அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் கலந்துகொண்ட அமைச்சர் கருணாசேன கொடிதுவக்குக் கருத்துத் தெரிவிக்கையில் -

சாதாரணதரப் பரீட்சையில் மாணவர்கள் முக்கியமான பாடங்களில் சித்தியெய்வதற்கான வழிவகைகளைக் காண்பதே இந்த நடவடிக்கையின் நோக்கம் என்றும், இதன் மூலம் மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு வாய்ப்புகளை ஏற்படுத்தலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.


# ஈழத்து இந்து சமயப் பண்பாட்டு விழுமியங்களின் தொன்மையை எடுத்துக்காட்டும் தொல்பொருட்கள்!

ஈழத்தில் பல்வேறு சூழ்நிலைகளில் -பல்வேறு சமூக இனக்குழுமங்கள் வாழ்ந்து வந்தன. அவற்றில் மிகவும் சிறப்பு வாய்ந்த இனக்குழும அமைப்பாகத் தமிழர்கள் விளங்கினர். அதுமட்டுமல்லாது அவர்கள் தமக்கேயுரிய சமூக, சமய, கலை, கலாசார, அரசியல், பொருளாதாரக் கட்டமைப்புக்களை மேம்பாடு அடையச் செய்துள்ளதையும் அண்மைய தொல்பொருள் கண்டுபிடிப்புக்கள் மிகவும் துல்லியமாக எடுத்துக்காட்டுகின்றன.


தமிழரின் பண்பாட்டுக் கோலங்கள் மிகவும் புராதனமானவை. அவர்களின் வாழ்வியல் பரிமாணம் தனித்தன்மையைக் கொண்டது. அவர்கள் ஒரு இனத்துக்குரிய அடையாளங்கள் அனைத்தையும் கொண்டு சிறப்பாக வாழ்ந்தனர் என்ற வரலாற்று உண்மை - சமகாலத்தில் பல்வேறுபட்ட ஆய்வுகள் மற்றும் எச்சங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு வருகிறது. காலத்தின் தேவையை உணர்ந்த தமிழ் மற்றும் பிறமொழி ஆய்வாளரின் முன்மாதிரியான முயற்சியே இது எனச் சுட்டிக்காட்ட முடியும்.

சமகாலத்தில் தமிழர் பாரம்பரியம் மற்றும் புராதன ஆதாரங்கள் மறைக்கப்பட்டு, பல்வேறுபட்ட திட்டமிட்ட சக்திகளால் தமிழர் பண்பாட்டின் அடிப்படைகள் உலகளாவியரீதியில் அழிக்கப்பட்டு வரும் சூழ்நிலையில், ஈழத்தமிழரது முதுமையினை எடுத்துக்காட்டும் எச்சங்களாக இருநூறு சமயம்சார் சின்னங்களும், வன்னியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட 10 இந்து சமய விக்கிரகங்களும், அவற்றுடன் தொடர்புடைய தொல்லியல் ஆதாரங்களும் எமது புராதன தன்மையை உலகிற்குப் பறைசாற்றுகின்றன.

## வரலாற்றுக் குறிப்புகள்



அநுராதபுர இசுறுமுனியவில் உள்ள கி.பி.8ஆம் நூற்றாண்டுக்குரிய சிவன் - பார்வதி சிற்பங்கள்



யாழ்ப்பாண அரசு காலத்தில் வழிபடப்பட்ட இந்து விக்கிரகங்கள்.

கி.பி.16 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணத்து ஆலயங்கள் பற்றித் தமிழ் இலக்கியங்கள் பேசுகினறன. ஆனால், அக்காலத்திற்குரிய கலைமரபுடன் எந்தவொரு ஆலயத்தையும் தற்காலத்தில் காணமுடியவில்லை.

இதற்கு இங்கு ஆட்சிசெய்து கொண்டிருந்த தமிழ் அரசை வெற்றிகொண்ட போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும் -தமது கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும் நோக்கோடு, இவ்வாலயங்களை அழித்தமைதான் காரணம். போர்த்துக்கேயர் மட்டும் இங்கிருந்த 500 ஆலயங்களை அழித்ததாகத் தமது ஆவணத்தில் குறித்துள்ளனர். இதனால், இன்று யாழ்ப்பாணத்தில் காணப்படும் ஆலயங்கள் ஒல்லாந்தரின் பிற்கால ஆட்சியில் இருந்தே கட்டப்பட்டவையாகும்.

ஆயினும், அவற்றுள் பெரும்பாலானவை முன்னைய ஆலயங்கள் அமைந்திருந்த இடங்களில் அல்லது அதற்கு அருகில் கட்டப்



பட்டுள்ளன. அவற்றுள் சில ஆலயங்களில் முன்னைய கலைமரபின் எச்சங்களும், பண்டைய காலந்தொட்டு வழிபடப்பட்டு வந்த விக்கிரகங்களும் காணப்படுகின்றன. யாழ்ப்பாண அரசின் ஆதிக்கம் கிழக்கிலங்கைவரை பரந்திருந்ததால், யாழ்ப்பாணத்திற்கு வெளியேயும் பல ஆலயங்கள் அக்காலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

அதனால்தான் இன்று பிரசித்தி பெற்றதாக விளங்கும் பல ஆலயங்களின் வரலாறு யாழ்ப்பாண அரசுடனும், அதற்கு முந்திய காலத்துடனும் தொடர்புபடுத்திப் பேசப்படக் காரணமாகும். இதை உறுதிப்படுத்தும் வகையில் யாழ்ப்பாணத்திற்கு வெளியே குறிப்பாக, வன்னிப் பிராந்தியத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சிற்பங்கள், சிலைகள், செப்புத் திருமேனிகள் விளங்குகின்றன.

## 2500 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஆலய மரபு

2500 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஆலயம் ஒன்று மந்துவில் என்ற கிராமத்தில் இயற்றாலைக் கோட்டை என அழைக்கப்படும் புராதன கட்டட அழிபாடுகளின் மத்தியில் காணப்படுகிறது. இங்கு 14 தெய்வங்களைக் குறிக்கும் 14 கற்கள் வட்டமாக அமைந்த மரநிழலில் கீழ் நடப்பட்டு -அவை நாச்சியார், காளி, பிள்ளையார், முனி, கறுப்பன், அண்ணமார், பூதவராயர் போன்ற பெயர்களில் வழிபடப்பட்டு வருகின்றன.

இத்தெய்வங்களின் பீடமாகவுள்ள செங்கட்டிகளில் 2200 வருடங்கள் பழமை வாய்ந்த பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருப்பதோடு, இதன் சுற்றாடலில் 2000 வருடங்




களுக்கு முற்பட்ட 700 உரோம நாட்டு நாணயங்களும், பிற்கால சோழ, பாண்டிய, சேது நாணயங்களும், பண்டையகாலக் குடியிருப்புகளுக்குரிய மட்பாண்ட ஓடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சுவாமி ஞானப்பிரகாசர் 1928 ஆம் ஆண்டு எழுதிய தனது நூலில் இவ்விடத்திலிருந்து மக்கள் பல வண்டில்களில் கற்களை ஏற்றிச்சென்றதைத்தான் பார்த்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

அது இன்றும் தொடர்வதைப் பார்க்கலாம். இவ்வாலயத்திற்குச் சில யார் தொலைவில் மிகப்பெரிய ஆலயத்தைக் கட்டியுள்ள இவ்வூர் மக்கள் -அந்த ஆலயத்தை மட்டும் தற்காலமுறையில் மாற்றிக்கட்ட விரும்பவில்லை.

## ஈமச்சின்ன வழிபாடு

தற்கால ஈழத் தமிழரது மூதாதையினரான திராவிட மக்கள்- இற்றைக்கு 3000 வருடங்களுக்கு முன்னர் இறந்தவர்களுக்கு மறுபிறப்பு உண்டு எனக் கருதி, அவர்களுக்கு ஈமச்சின்னங்களை அமைத்து வழிபட்டு வந்தனர்.

அவ்வாறு அமைக்கப்பட்ட ஈமச்சின்னங்களையும், அவர்கள் பயன்படுத்திய கலைவடிவங்கள் சிலவற்றையும் இப்புகைப்படம் எடுத்து விளக்குகின்றது. அவைதான் ஈழத்தில் இதுவரை கிடைத்த இந்துப் பண்பாட்டின் தொன்மைச் சான்றுகளாகும்.



## நாணயங்கள் காட்டும் ஈழத்து இந்துமதம்

ஒரு நாட்டின் அல்லது குறிப்பிட்ட ஒரு இனத்தின் பண்டையகால மதங்களை அறிவதற்கு அக்கால மக்கள் பயன்படுத்திய நாணயங்களில் இடம்பெற்றுள்ள சமயச் சின்னங்கள் முக்கிய சான்றுகளாகும். இதுவரை காலமும் ஈழத்து இந்துமதம் பற்றி ஆராய்ந்தவர்கள் - கி.பி. 13 ஆம் நூற்றாண்டுக்குப்



யாழ்ப்பாண அரசர் வெளியிட்ட சேது நாணயம்.

பின்னரே ஈழத்தமிழர்கள் நாணயங்களை வெளியிட்டனர்.

அக்காலத்திற்கு முற்பட்ட தமிழர் நாணயங்கள் தமிழ் நாட்டிற்குரியவை எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

அவற்றுள் தமிழ் நாட்டில் கி.பி. 11 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் வெளியிட்ட நாணயங்களில்தான் முதன்முறையாகத் தெய்வ உருவங்களைக் காணமுடிகின்றது. ஆனால், அம்மரபை ஈழத்தமிழர் நாணயங்களில் கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலிருந்து காணமுடிகிறது. இது ஈழத்தமிழரது மத வழிபாட்டின் தனித்



யாழ்ப்பாண அரச காலத்தில் வெளியிடப்பட்டது.

தன்மையைக் காட்டுகிறது.

ஈழத் தமிழர் நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ள சமயச் சின்னங்களுள் -தெய்வ வடிவங்கள், தெய்வப் பெயர்கள், தெய்வங்களோடு தொடர்புபடுத்தப்படும் விலங்கினங்கள், பறவைகள், கடற்பிராணிகள், நத்திபாதம், சூலம், குத்துவிளக்கு, பிறை, சூரியன், பூரண கும்பம், பலிபீடம், மூன்று கோடுகளால் அமைந்த பீடங்கள், வேல், மழு, உடுக்கு, சுவஷ்திகா, தாமரைச் செண்டுகள், சங்கு போன்றவற்றைச் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

இச்சின்னங்கள் பண்டுதொட்டு ஈழத்தமிழரிடையே சைவ, வைஷ்ணவ மதங்கள் முக்கியத்துவம் பெற்றிருந்ததைத் தெளிவாகக் காட்டுகின்றன.



ஈழத் தமிழர் கி.பி.5 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் வெளியிட்ட நாணயம்.

**யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளரும் பொருளியல் ஆய்வாளருமான கலாநிதி பரமு புஸ்பரட்ணத்துடனான சந்திப்பில் இருந்து தொகுக்கப்பட்டது.**

***சந்திப்பு - ப.இராஜேஸ்வரன்***

---

# ஜொலி ஸ்ரார் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம் - ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் வருடாந்தம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறும்.

இவ்வருட சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணத்தில் பிரபலமான 12 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன. இச்சுற்றுப் போட்டியின் முதல் சுற்று ஆட்டங்கள் 30 ஓவர்கள் கொண்ட போட்டிகளாகவும், இறுதிப் போட்டி 40 ஓவர்கள் கொண்ட போட்டியாகவும் இடம் பெறும்.

யாழ்.ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் கடந்த 20 வருட காலமாகத் தொடர்ந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியினை யாழ்.மாவட்ட ரீதியில் ஒழுங்கு செய்து நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(58)

## சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய கலை இலக்கியப் பேரவை ஆதரவில் ராணி சீதரனின் 'நடுகல்' சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை பி.ப.3.30 மணிக்கு அதிபர் க.நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் மீளக் குடியமர்ந்த குடும்பங்கள்

அரியாலை முள்ளிப் பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள 118 குடும்பங்கள் அடிப்படை வசதிகள் எதுவுமற்றநிலையில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றன.

மிகவும் வறுமைநிலையில் உள்ள இந்தக் குடும்பங்கள் மீளக் குடியமர்ந்து பல நாட்களாகியும் அவர்களுக்கான அடிப்படை வசதிகள் எவையும் இதுவரை வழங்கப்படாமையால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (34)

# பிரதேச செயலக நிர்மாணம் நிதி இன்றி இடைநிறுத்தம்

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச செயலக கட்டட நிர்மாண வேலைகளுக்கு அரசினால் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதேச செயலகத்துக்கென சொந்தக் கட்டடம் இல்லாத நிலையில் மக்களிடமிருந்து திரட்டிய பணத்தில் இருந்து யாழ்-பருத்தித்துறை பிரதான சாலையில் மூத்தவிநாயகர் கோயிலடிக்கு அண்மையில் ஒரு காணி கொள்வனவு செய்யப்பட்டது.

தொடர்ந்து காணியைச் சுற்றி எல்லை மதில்கள் இடப்பட்டு பிரதேச செயலக கட்டடத்துக்கான காணி என அதில் பலகையும் நாட்டப்பட்டது.

எனினும், கட்டட நிர்மாணப் பணிகளுக்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்யாததால் பணிகளை ஆரம்பிக்க முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (13)

## மனித உரிமைகள் அறிமுக கருத்தரங்கு

யாழ்.மாவட்ட கியூடெக் உயிர்ப்பூட்டல் சமாதானக் குழுத் தலைவர்களுக்கான மனித உரிமைகள் அறிமுகக் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் கியூடெக் மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்.மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் அருட்தந்தை ஜெயக்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மரியநேசம், யோசப் பாலா ஆகியோர் விளக்கவுரை நிகழ்த்தினார்கள்.

# இலக்கியச்சோலை

## அயம்

சிறுகதை

யோ. கர்ணன்

நான் பிறந்து இன்னமும் ஒருநாள்கூட முழுமை பெறவில்லை.

மேற்குத் திசை விளிம்பில் தங்கத் தகடாகச் சூரியன் நழுவிவிழுந்து கொண்டிருக்கும்

இனிமையான மாலைப் பொழுதில்...

எவரும் எதிர்பாராத வண்ணம் என் பிரசவம் நடந்து முடிந்தது.

இது சுகப்பிரசவமா என்பது எனக்குத் தெரியாது. என் தாயைப் பொறுத்தவிடயம் அது.

அவளது மனநிலையைப் பொறுத்துச் சுகமானதாகவோ... துக்கமானதாகவோ அமையலாம்.

பிரசவத்தேதி நிர்ணயிக்கப்பட்டு... பலர் எதிர்பார்த்திருக்கையில் என் பிரசவம் நிகழவில்லை. நான் பிரசவமாகப் போகின்றேன் என்ற விடயம் என் தாயாருக்குக்கூடத் தெரிந்திருக்காது. ஏனெனில், நான் எங்கிருந்து பிரசவமானேன் என்பது எனக்கே இன்னமும் புரியவில்லை. அநேகமாக அம்மாவிலிருந்து அல்லாமல் என்னிலிருந்தே நான் பிரசவமாகியியிருக்க வேண்டும்.

நான் பிரசவமாகிவிட்டேன் எனும் சேதியைப் பகிரங்கமாக அறிவித்தபோது, பலரும் பலவிதமாகப் பார்த்தார்கள். இவர்கள் அனைவரும் என் குடும்பத்தினர், சிலர் கோபமாகவும்... சிலர் பொறாமையாகவும்... சிலர் எரிச்சலாகவும் பார்த்தனர்.

இன்னும் சிலரோவெனில் பெரிதாகக் கெக்கட்டமிட்டுச் சிரித்துக்கொண்டனர். நான் தேவலோக மங்கையோவெனப் பரிகாசிக்கிறார்கள். என் பிரசவத்தின் பரிமாணத்தைப் புரிந்துகொள்ள மறுக்கிறார்கள்.

ஐந்தரையடி உயரமாகவும்... இருபத்திரண்டு வயதுடனும் பூவுலகில் ஒருத்தி பிறப்பதென்பது நடவாத காரியமாம். சிலவேளைகளில் தேவலோகத்தில் நிகழலமாம். அதனால், என்னையும் தேவமங்கையோவெனப் பரிகாசிக்கிறார்கள்.

இவர்களிற்கு என்ன பதிலைக் கூறுவது. இவர்களை எண்ணி நானும் சிரித்துக்கொண்டேன்.

கல்லாயிருந்த அகலிகை இராமனின் பாதச்சுவட்டை எதிர்பார்த்திருந்ததுபோல, நானும் எதிர்பார்த்திருந்தேன் என்பது யாருக்குப் புரியும்?

இராமனின் பாதச்சுவடு தன் மேற்பதியும் வரையில் அகலிகை எப்படியிருந்தாள்? கல்லுக்குள் எங்கே ஒளிந்திருந்தாள்?

அகலிகையும் பெண், நானும் பெண். கல் ரூபத்திலல்லாமல், அதையொத்த மனித ரூபத்தில் வாழந்தேன். காலச் சுவடு என் மீது பதிந்தபோது, மனிதகுலத்தவாளானேன் என்றோ அல்லது புதிதாகப் பிரசவமானேன் என்றோ சொன்னால் என்ன தப்பு?

இதுவரை கல்லாகவோ... கூட்டுப் புழுவாகவோ இருந்திருக்கிறேன் என்றோ... இப்போதுதான் புதிய உலகைத் தரிசிக்கிறேன் என்றே கொள்ளலாம் அல்லது இதுவரையில் என் பிரசவம் மறுக்கப்பட்டிருக்கின்றது என்றோ... அடிக்கடி இறந்து கொண்டிருந்தவள், இன்று ஒருமுறை உயிர்த்தெழுந்திருக்கிறாள் என்றோகூடக் கொள்ளலாம்.

ஒவ்வொருமுறையும் நம்பிக்கையுடனும்... ஆவலுடனும் என் பிரசவ முயற்சிகள் நடந்தபோதும், என் தாய்... தந்தை... உறவுகள் என எவரோ ஒருவரால் அவர்களே அறியாதவண்ணம் என் பிரசவ முயற்சியைத் தடுத்துவிட்டார்கள்.

என் பிரசவ முயற்சிகள் தோல்வியுறும்போதெல்லாம், உள்ளுக்குள்ளேயே உடைந்து போவேன். என் பிரசவம் தடைப்படுகையில் என் தாய்க்குக்கூட வலிக்கவில்லை. மாறாக என் இதயத்தில்தான் ஒவ்வொரு வலியும் படிந்தது.

இப்போதுதான் மெலிதான ஞாபகம் வருகின்றது. என் பிரசவமுயற்சிகள் தோல்வியுற்றபின், தங்களின் இஷ்டப்படி என்னைப் பிரசவிக்க முயன்றிருக்கிறார்கள். அப்போதும் நான் பிரசவமாகவில்லை. சிலவேளைகளில் பிரசவமானதுபோலப் பாசாங்கு செய்திருக்கிறேன். அவர்கள் அதைப் பிரசவம் என நம்பியிருக்கலாம்.

எனக்கு இருபத்திரண்டு வயதுப் பராயமாகியும், இன்றுதான் என் பிரசவ நாள், என் சுயம் வெளிவந்த நாள்.

நான், நானாக இருக்க விரும்பியும்... என்னில் செலுத்தப்பட்ட சக்திகளை உதறி, என் சுயத்தில்நிற்க விரும்பியும், இதுவரை அந்தச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

ஏதே ஒருபொழுதில் என் சுயம் மறுக்கப்பட்டதை உணர்ந்திருக்கிறேன். என் முன்னிருந்த் தெரிவுகள்... விருப்புக்கள் போன்றவற்றில் என் சுயத்தை வெளிக்காட்ட முனைந்த பொழுதுகளில் தடுக்கப்பட்டிருக்கின்றேன். இதனால், எனக்குள்ளிருந்த இன்னொருத்தியைப் பிரசவிக்க முடியாமல் போய்விட்டது. எனக்குள்ளிருந்த நான், வெளிவரமுடியாமல் தவித்தேன். நினைவு தெரிந்த நாளிலிருந்தே இது நடந்திருக்கின்றது.

என் ஒற்றை இலக்க வயதுகளின் இறுதிக்காலத்தின் ஒருநாளில், கோபுவுடன் விளையாடியமைக்காக அடிவாங்கியிருக்கிறேன். கோபுதான் மண் விளையாட்டிற்குச் சரியான ஆள். ஆனால், அவன் பெற்றோரும், என் பெற்றோரும் கதைப்பதில்லையாம். இதனால், நான் கோபுவுடன் விளையாடக் கூடாதாம்.

கோபுவிற்குப் பதிலாக என் பெற்றோரால் அறிமுகப்படுத்தப்பட்டவன்தான் ரவி. அவன் இரண்டு வீடு தள்ளியிருப்பவன். ஆரம்பம் முதலே எனக்கு ரவியைப் பிடிப்பதில்லை. திருட்டு முழி முழித்தப்படி, பதுங்கித்திரியும் அவனைக் கண்டாலே எரிச்சல்தான்வரும். இருந்தாலும், அவனுடன்தான் விளையாட வேண்டிய நிலைமை. ரவியை நிராகரித்துவிட்டுக் கோபுவுடன் போய் விளையாடுயென என் மனதிற்குள்ளிருப்பவள் ஓயாமல் சொல்லிக்கொண்டிருப்பாள். அப்பாவின் பிரம்பு பயமுறுத்தியதால், அந்த ஆசையை மனதுக்குள்ளேயே அமுக்கிவிட்டேன். அவளது பிரசவமுயற்சி தடுக்கப்பட்டுவிட்டது.

சில வருட ஓட்டத்தில் கோபுவின் இடத்தை ரவி பிடித்துவிட்டான். இப்போது கோபுவும் ஊரில் இல்லை. எனக்கு இப்போது ரவிதான் எல்லாம். பாடசாலை முடிந்ததும்... பாடசாலை இல்லாத நாட்களில் முழுநாளும் விளையாடுவதற்கு ரவி வேண்டும்.

இப்போதெல்லாம் ரவி அந்நியன் மாதிரித்தோன்றுவதில்லை. உரிமையுள்ளவன் மாதிரித்தான் தோன்றினான்.

அப்போதுதான் ஒரு நாள், நான் பெரிய மனுசியாகிவிட்டேன் என அறைக்குள் முடக்கிவிட்டனர். அறையைவிட்டு வெளியே வரவோ... பலருடன் பழகவோ... விளையாடவோ முடியாமல் தடுக்கப்பட்டேன்.

நான் அறைக்குள் இருந்தபோது, வெளியில் ரவி யாருடனோ கதைப்பது கேட்டது. வெளியே ஓடிப்போய், முதல் நாள் விளையாடிய விளையாட்டின் குறையைத் தொடர வேண்டும் போலொரு உந்துதல். வெளியே போய்... ரவியுடன் விளையாடு என உள்ளிருந்தொரு உந்துதல் பிரசவத் தாய்க்கேற்படும் உணர்வு என்னுள்.

ஆயினும், அக்குழந்தை பிரசவமாகவில்லை. அடிக்கடி அறைக்குள் வந்துபோகும் அம்மாவை மீறி எதுவுமே செய்ய முடியாமல் போய்விட்டது.

இப்போதெல்லாம் என் உலகம் வெகுவாக மாறிவிட்டது. முன்னைய உலகமோவெனில், பரந்தது... எல்லையற்றது. அதற்குள் யாரும் நுழையலாம், வெளியேறலாம். மிகுந்த சுதந்திரமுடையது. இப்போதைய உலகமோ - வெகுவாகச் சுருங்கியது... குறைந்த பரப்புடையது. எல்லை வேலிகள் இரும்பாலானவை போலத் தோற்றங்காட்டின. இந்த உலகத்தில் வாழ்பவர்கள் தொகையும் வெகுவாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

எதற்கெடுத்தாலும் வெட்கம் கொள்பவளாகவோ அல்லது வெட்கம் கொள்பவள்போலக் காட்டிக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தமும் இணைந்துகொண்டது. என்னால் இவற்றுடனெல்லாம் இணைந்துபோக மனமிருக்கவில்லை. ஆனாலும், அந்தத் திசையில் செல்லுத்தப்பட்டேன்.

அன்றொருநாள், பாடசாலை இடை வேளையின்போது சக மாணவனொருவன் எம்மைக் கிண்டலடித்தான். என்னுடன் வந்த சக மாணவியர்கள் குனிந்தபடி போயினர். எனக்குள்ளிருந்தவளின் குரல் - அவனுக்குச் சரியான பாடம் புகட்டு என ஆர்ப்பாட்டம் பண்ணியது. ஆனாலும், ஏதோவொன்று என்னைக் கட்டுப்படுத்திவிட்டது. இச்சம்பவம் நடப்பதற்குச் சில தினங்களின் முன் -அம்மா சொன்ன கதையொன்றுதான் தடுத்த காரணமாகவும் இருக்கலாம். நமது உறவுமுறைப் பெண்ணொருத்தியின் பெயர் ரூபி. ஆண்பிள்ளைகளுடன் பகிரங்கமாகக் கதைத்துத் திரிகின்றாள் என்ற குற்றச்சாட்டு அவள் மீது இருந்தது. அன்றொருநாள், வீதியில் வைத்து தன்னை நக்கலடித்த ஒருவனைப் பகிரங்கமாகத் திட்டிவிட்டாளாம். ஆட்டம் போட்டுத்திரியும் அவளை யார் கட்டப் போகின்றான் என அம்மா சொன்னாள்.

அவனைப் பகிரங்கமாகத் திட்டியதால் அவளில் எது குறைந்தது?

அவன்கூட நடுவீதியில் வைத்துத்தானே கேலிசெய்தான். தன்னை நடுவீதியில் வைத்துக் காயப்படுத்துகின்றான் என்பதை உணர்ந்து, பதிலடியாகத் திட்டிருக்கிறாள். இது எப்படித் தவறாகலாம்?

பதிலுக்குத் தாக்க முடியாதவர்களாக... தாக்கப்படுவதற்கென்றே பிறந்தோமா?

இந்தக் குணங்களெல்லாம் எங்கள் மரபணுக்களினூடாகக் கடத்தப்பட்டு, இனிமேலும் கடத்தப்படுமா?

இப்படியாக என் மனப்போராட்டங்கள் உச்சநிலையடைந்த போதுதான், சுதாகரின் கடிதமும் என்னிடம் வந்து சேர்ந்தது.

எல்லாக் காதலனையும் போலவே, என்னைத் தீவிரமாகக் காதலிப்பதாயும்... என் அன்பிற்காக ஏங்குவதாகவும் குறிப்பிட்டு, சில கவிதை வரிகளும் எழுதியிருந்தான்.

ஒருவன் - ஒருத்தியைக் காதலிக்கிறான் எனில் ‘திடும்’ என அவள் முன்னால் போய்நின்று கடிதத்தை நீட்டமாட்டான். சில காலமாகவே அவள் பின்னால் சுற்றி... சாடை மாடையாகத் தன் காதலை வெளிப்படுத்திய பின்தான் கடிதம் கொடுக்கத் துணிவான். அவன் மலங்க மலங்க முழித்தபடி செய்யும் இக்காரியங்களால், அவன் கடிதம் கொடுக்கும் முன்னரே அவளுக்கு எல்லாம் புரிந்துவிடும்.

எனக்கும் தெரியும் - சுதாகர் என்னைக் காதலிப்பது!

எனக்கும் சுதாகரை வெகுவாகப் பிடித்திருந்தது. அவனது அறிவு... அழகு... குணம் அனைத்தும் முதற்தரமானவை. என் கனவில் வரும் நாயகனை ஒத்தவனாக அவனிருந்தான்.

ஆயினும், அவன் காதலை இதுவரையில் நான் பிரதிபலிக்கவில்லை. அதற்கான காரணம், அதுவரை அவன் வெளிப்படையாகக் காதலைத் தெரிவிக்காததுதான். இதனைவிடவும், நான் அறிந்தவரையில் பெண்கள் காதலை வெளிக்காட்டக் கூடாதாம். போதாதற்கு, அண்மையில் படித்த கதையில்வரும் ஆண்களின் உரையாடலின் சாரம்சம் இப்படியிருந்தது- தாமாக வந்து காதலை வெளிப்படுத்தும் பெண்களை நம்பக்கூடாதாம். இவற்றுடன் பெற்றோரின் பயமும் தடுத்துவிட்டது.

இன்று அப்படியல்ல. சுதாகர் கடித மூலம் கேட்டுவிட்டான். பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்.

ஏராளம் மனப்போராட்டம். சுதாகரைக் காதலிப்பதா... விடுவதா? காதலித்தால் பெற்றோர் தடுப்பார்கள். அவர்களை எதிர்கொள்வேனா, நம் காதல் வெற்றி பெறுமா? இந்தத் தடைகளைக் கண்டு பயந்து என் மனதிற்கினியவனை மணக்காது விடுவதா?

அநேகமாக அன்றைய நாள் முழுவதும் அறைக்குள்ளேயே முடங்கிக்கிடந்தேன். முழுதாக ஒருநாள்ப் போராட்டம். முடிவில் சுதாகரைக் காதலிப்பது என முடிவு செய்தேன். சற்று வித்தியாசமாகவே காதலிப்போம் என்றும் நினைத்தேன். குச்சொழுங்கைகளிலும்... வயலோரங்களிலும் காதலை வளர்க்காமல், ஆரம்பத்திலேயே பெற்றோரின் அனுமதியைப் பெற்றால் என்ன என யோசித்தேன். பெற்றோரிடம் சொல்லிவிட்டுச் சுதாகரைக் காதலிப்பது என முடிவெடுத்தேன்.

இப்படியென்னவோ முடிவெடுத்தது உண்மைதான். ஆனால், அதற்குரிய மனவலிமை வேண்டுமே! பெற்றவர்களின் கதைக்கு மறுபேச்சுப் பேசாதவள்.. இருபத்திரண்டு வயதாகியும் பெற்றவர்களிற்கு அடங்கியிருப்பவள் (அநேகர் அப்படியில்லாததால்க் குறிப்பிட்டேன்) திடீரென முன்னாற்போய் நான் அவனைக் காதலித்தேன்.. அவனையே கல்யாணம் செய்வேனெனக் கூற முடியுமா?

கூறுவதாக முடிவெடுத்தேன். அதற்கான மனவலிமையை என்னுள் பெருக்க ஆரம்பித்தேன். ஒத்திகையிலும் ஈடுபட்டுக்கொண்டேன்.

அன்றுமாலை -

அப்பாவும், அம்மாவும் முன் கூடத்திலிருந்தனர். இதுதான் சரியான சமயம் என எண்ணி, மெதுவாக அவர்களிடம் போனேன்.

நான் போனவிதத்தை வைத்தே ஏதோ சொல்லத்தான் வருகின்றேன் என்பதைப் புரிந்த அப்பா - என்ன என்கின்ற மாதிரிப் பார்த்தார். மெதுவாக ஆரம்பித்தேன்.

மனதுக்குள் ஒரு வேதனை. இன்பமூட்டுவதுபோலவும்... வேதனையூட்டுவது போலவுமிருந்தது. என்ன இது? இதுதான் பிரசவ வேதனையோ?

ஓ! இதுதான் பிரசவ வேதனை. நான் பிரசவமாகியே விட்டேன். வெகுகாலமாக எனக்குள்ளே கருக்கொண்டிருந்த நான், என்சுயம் பிரசவமாக முடியாமல் தவித்திருந்து, இன்று பிரசவமாகிவிட்டேன்.

வெகுகாலமாகத் தடைப்பட்டு,. தடுக்கப்பட்ட நான்



இப்போது பிரசவமாகியே விட்டேன். “என்னடி... காதலிக்கிறியோ... உனக்கு நாங்கள் விட்டஇடம். இஞ்ச பாருங்கோவனப்பா... இந்த அறுந்தவள் இப்படிச் சொல்லியும் குத்துக்கல்லுமாதிரி இருக்கிறியளே” அம்மா கூச்சலிட்டுப் பெரும் அனர்த்தம் உண்டாக்கினாள்

அப்பா மௌனமாகவே உட்கார்ந்திருந்தார். இத்தனை துணிவு எனக்கு எங்கிருந்து வந்தது என அவர் நினைத்திருக்கலாம்.

நான் அறைக்குள் சென்று தாழிட்டுக் கொண்டேன்.

ஏறக்குறைய அன்று முழுவதும் வீடு மயானம் மாதிரியே இருந்தது. இடையிடையே அம்மாதான் விசும்பிக்கொண்டிருந்தாள்.

அன்றிரவு நான் அறையைத் திறக்கவுமில்லை, சாப்பிடவுமில்லை. வெகுநேரமாக உறக்கமும் வரவில்லை. எப்போது உறங்கினேன்... எப்போது விடிந்தது என்ற கணக்கெல்லாம் தெரியாது. விழித்துப் பார்த்தபோது விடிந்து வெகுநேரமாகியிருந்தது.

அறையைத் திறந்து வெளியே வந்தேன். தங்கைகள் இருவரும் ஒரு மாதிரியாகப் பார்த்துக்கொண்டு போயினர். என்னை நெருங்கவோ... கதைக்கவோ அச்சப்பட்டிருக்கலாம். அல்லது அவர்கள் பார்வையில் நான் கோலிக்குரியவளாகத் தெரிந்திருக்கலாம்.

சாப்பிடுகிறேன் என்ற பெயருக்கு தட்டில் கையளைந்துவிட்டு, மீண்டும் அறைக்குள் புகுந்துகொண்டேன். மதியத்தை நெருங்கும் பொழுதில் அறைக் கதவு தட்டப்பட்டது. திறந்தேன். அப்பா நின்றார். என்னைக் கடந்து உள்ளே போனவர்

“இஞ்ச பார் சுதா... இந்தக் காதல்... கீதலெல்லாம் உனக்குச் சரிமாதிரிப்படலாம். ஆனால், சமூக மெண்டு ஒண்டிருக்குது. அதோட ஒத்துத்தான் நாங்கள் போகவேணும். உனக்கு ரெண்டு தங்கச்சி இருக்குது. நீ அவனைக் கட்டிக்கொண்டு போனால், ஆரும் இதுகளைப் பொம்பிளை கேட்டு வருவினமோ... யோசிச்சுப்பார்...எங்களுக்காக இல்லாட்டிலும், உன்ர தங்கச்சியளுக்காவது நீ காதலைக் கைவிடவேணும். நான் சொல்லக்கூடியது இவ்வளவுதான்...’ என்றுவிட்டு அப்படியும் இப்படியுமாக நடந்தார். நான் மௌனமாகவே இருந்தேன். என்ன செய்வதென்றே தெரியவில்லை. அப்பா அடாவடியாக நின்றார் எனில், நானும் அப்படியே நின்றிருப்பேன். ஆனால், அப்பா காலடியில் அல்லவா விழுகிறார்.

(9ஆம் பக்கம் பார்க்க)

# பகுத்தறிவுள்ள அஃறிணைகள்

ஆல மரக்கிளை கீழ் - காகம்
ஆவி துறந்திருக்க
ஓலமிடுகின்ற - சுற்றம்
ஊரை உலுப்பியது.

காலை என்வீட்டை- அது
கடந்து போயிருக்கும்
வேளை வந்ததென - காலன்
வேடம் கலைத்தானோ...?

அழுக்கை உண்டு வாழும் - வெறும்
அஃறிணை என்றிருந்தேன்
செலுத்தும் அஞ்சலியில் - என்
சிந்தை இழந்துவிட்டேன்.

உள்ளம் பறவைகளின் - உச்ச
உணர்வை வியந்திருக்க
கல்லை எடுத்தொருவன் - அந்த
காகங்கள் மீதெறிந்தான்

வாடி அழுத இனம் - சிறு
வட்டம் அடித்துவிட்டு
ஓடிக் கலையாமல் - பின்பும்
ஒப்பாரி நாடியது

சாவை முரசறையும் - அந்த
சங்கீதம் அடங்கியபின்
தீவைப் (?) பிடித்த சனி - எம்
தெருவில் இறங்கியது.

வெடியின் மந்திரத்தில் - நர
வேள்வி தொடங்கியது
விடிந்தால் கூடியழும் -மனித
விந்தை நிகழ்ந்திடுமா?

சாதி இனமதத்தால் - மனம்
தற்கொலை புரிந்திருக்கும்
மீதி பயப்பிசாசால் - கூடி
மௌனம் காத்திருக்கும்.

நோயும் விபத்துகளும் - உயிரை
நெருங்கும் எதிரிகளும்
பாயும் எறிகணையும் - நம்மை
படுத்துப் பார்த்ததுண்டோ...?

சோகம் சூழ்கையிலே - அழும்
துணிவும் இல்லையெனில்
காகம் அஃறிணையா - இல்லை
கலங்கா மனிதர்களா...?

உச்சிக்கிழான்

# கிழக்கும் மேற்கும்

## சிறுத்தொண்டர் நாயனார் - அமிஸ் எட் அமிலஸ்

ஆயினும் தன்னுயிர் நண்பனைக் காத்திட
தன்நண்பன் நோயினைப் போக்கிட விரும்பி
தனக்குள்ள ஒரேயொரு குழந்தையை வெட்டிப்



பெருகிய குருதியில் தன்நண்பன் அமிஸ்ஸைக்
குளிக்கச் செய்யவே அமிலஸ்ஸின் கொடிய
குஷ்ட நோயும் அவனைவிட் டகன்றது!
உயிரின் இனிய உயர்நண்பர் களான
அமிஸ்ஸும் அமிலஸும் தேவாலயம் போயினர்!
ஆண்டவ னுக்குத் தங்கள் நன்றியைக் கூறினர்!!

அடியவர் பசிதீர்க்கத் தன்னொரு பிள்ளையின்
தசையிற் சமைத்த கறியுடன் உணவு
படைத்துத் தொண்டினில் உயர்ந்து நின்றார்
சிறுத்தொண்டர் நாயனார் கிழக்கினில் அன்று!
தன்பிள்ளை யினுடைய இரத்தத் தினிலே
தன்னுயிர் நண்பனைக் குளிக்கச் செய்து
நண்பனின் நோயைத் தீர்த்து நட்பினில்
உயர்ந்தான் அமிலஸ் மேற்கினில் அன்று!!

**(பரஞ்சோதியார்) சிறுத்தொண்டர் நாயனாரின்**
**குருபூசை தினம்:- சித்திரை 07 (பரணி) கி.பி 600-660**
**முதலாம் நரசிம்மவர்மன் (நரசிங்கன்) - கி.பி 630-668**
**காண்சன்ஸ்-டீ-கெஸ்டி - கி.பி.12 ஆம் நூற்றாண்டிலே**
**எழுதப்பட்டது. (பிரெஞ்சுமொழி)**

**(முற்றும்)**

# A - 9 ஐ நீளும் நினைவுகள்




அலைகள் நித்தம் அடிக்க அடிக்கவே
அசைவிலாப் பெரும் பாறையுந் தூளாகும்
நிலைமைபோல நெருக்கம் வலுத்தது.
நீட்டிநின்ற தடைகள் உடைத்துமே
நுழைந்து தலைமை அரணை நொருக்கவே
நோக்கமாக பொடியள் முயன்றிட
"பலவேகய" எனப் பாய்ந்த துருப்புகள்
பாறும் முகாமைக் காக்கப் பொருதின.

கண்டி வீதிக்குக் கிழக்காய்... வெறும் மணல்,
கண்டற்காடு, நீரேரி, சதுப்புகள்.
கொண்ட பொட்டல் வெளிகள் எங்கெங்கணும்
கொட்டப்பட்டன விமானம் விமானமாய்க்
குண்டுகள்; கட்டைக்காடு கடந்த பின்
கொம்படி புல்லா வெளி யென
மண்ணைத் தாண்டியே தட்டுவன் கொட்டியூ(டு)
மடைதிறந்ததாய்ப் படையினர் பூந்தனர்.

காற்றை மட்டும் அரணாக்கி, ஓர் மாத
காலம் பொருதிக் களமே சிவந்திட,
ஆற்றலாற் பெரும் முற்றுகைச் சண்டையை
ஆடியே...பலச்சமநிலை அற்ற போர்
ஊற்று உப்பு நீரேரி யூடு புகுந்து
உதவ ஆனை இறவு... நழுவிற்று!
நூற்றுக் கணக்காய் 'இளமை' மடிந்தது.
நொடிந்து ஏ-9 காய்ந்து கிடந்தது.

**- ஜெயங்கொண்டான்.**

# பாலையும் சோலையும்



## கலாநிதி சொக்கனின் வாழ்க்கைப் பதிவுகள்

**எ**ன் நல்ல காலம்! பதுளை ஊவாக்கல்லூரியிலே, நான் ஆசிரியர் கலாசாலையிலிருந்து பயிற்சி முடிந்து வெளியேறிய ஒரு மாதத்திற்குள்ளேயே உதவி ஆசிரியர் நியமனம் கிடைத்தது. 28.01.1952 இல் நான் ஆசிரியரானேன்.

'நல்ல காலம், அதிஷ்டம்' என்று நான் சொல்வதற்குத் தகுந்தகாரணம் உண்டு. என்னிலும் ஆறு வயது மூத்தவரும், திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையிலே பயிற்சிபெற்ற அனுபவசாலியும், பாலபண்டிதரும், எண்கணித விற்பன்னருமான அன்பர் ஐ.இராசரத்தினம் (அன்பர் என்பது நாம் அவருக்கு வழங்கியபட்டப்பெயர். 'ஐயன்னா' என்பது இவரின் புனைபெயர். 'நாடக மாலை' என்ற குறுநாடகத் தொகுப்பு நூலை வெளியிட்டவர். நீண்ட காலம் எழுதுவினைஞராய்ப் பணியாற்றி, அதனைத் துறந்து ஆசிரியராய் வரமுனைந்தவர்.) குறித்த ஆசிரியர் பதவிக்கு என்னைப்போலவே விண்ணப்பம் அனுப்பி, நேர்முகப் பரீட்சைக்கும் சமுகமளித்திருந்தார். அவரளவு அறிவு, அனுபவம் பெறாத - மாணவ வழுவழுப்பு நீங்காத என்னை ஊவாக்கல்லூரி அதிபர் எஃப் என்.ஹெற்றியாராச்சி தெரிந்தெடுத்தாரென்றால் அது என் நல்லகாலம் என்று கூறாமல் வேறென்ன என்பது?

நான் 1955 ஜுன் மாதம், பேராதனைப் பல்கலைக் கழகத்திலே ஈராண்டுக் காலம் கற்றுத் (1953-1955) தமிழ் டிப்ளோமாப் பரீட்சைக்குத் தோன்றியபின், தர்காநகர் (அளுத்கம) சாஹிராக் கல்லூரியில் ஆசிரியர் நியமன நேர்முகப் பரீட்சைக்குச் சென்றிருந்தபோதும், மீண்டும் அன்பர் 'ஐயன்னா' அங்கே தாமும் அதற்கு வந்திருந்தார். அங்கும் என்னையே அதிபர் ஷாபி மரிக்கார் தேர்ந்தெடுத்தார். இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் விதியொன்றே எங்கள் இருவரையும் போட்டியிடவும் - இளமையும், துடிப்பும் மட்டுமே மூலதனங்களாகக் கொண்ட நான் தெரிவுபெறவும் வைத்தது. ஐயன்னாவுக்குக் கிடைக்காது எனக்கு ஆசிரிய நியமனம் கிடைத்தபோது நான் மகிழ்ந்தேன் என்பதை மறுத்தல் இயலாது.

ஆனால், ஹற்றன் புனித ஜோன் பொஸ்கோ கல்லூரியில், அன்பரோடு சக ஆசிரியனாகக் கற்பிக்க நேர்ந்தபோது, அவரின் நற்பண்புகள் நேரடியாகக் கண்டும், உணர்ந்தும்கொள்ள நேர்ந்த போது, இத்தகைய ஒருவருக்கா நான் போட்டியாயிருந்தேன் என்று கழிவிரக்கப்பட்டது உண்மை. உயர்ந்த நகைச்சுவையும், இன்சொல்லும், தமிழ்த்திறனும், கணித ஆற்றலும் வாய்ந்த 'ஐயன்னா'வின் நினைவாக அவர் வாழ்ந்த ஒழுங்கைக்கு (சுன்னாகம்) 'ஐயன்னா வீதி' என்று பெயர் சூட்டியுள்ளதிலிருந்து அவரின் மகிமை புலனாகின்றது.

நான் சுழிபுரத்தில் இடம்பெயர்ந்து, என் மகள் வீட்டிலே தற்காலிகமாக வசித்த காலத்தில், அன்பரின் ஏக புத்திரனின் மறைவையொட்டி அவரின் நினைவு மலருக்கு அஞ்சலிக் கட்டுரை எழுதும் துர்ப்பாக்கியம் ஏற்பட்டதும் என் விதிப்பயனே. இவையெல்லாம் அவருக்கும், எனக்கும் முற்பிறப்பொன்றிலே இருந்த தொடர்பினால் விளைந்தனவோ என்று நினைக்காது இருக்க முடியவில்லை.

என் வறுமையும், பொருளாதார தேவையும் ஒன்று கூடி என் பதினைந்து வயதுப் பிராயத்திலேயே 'ரியூசன்' சொல்லிக்கொடுக்கும் ஆசிரியனாய் என்னை மாற்றின. ஆசிரியத்துவத்தின் நுட்பங்களை அறிந்துகொள்ளாத பராயம் அது. ஏதோ எனக்குத் தெரிந்ததைப் படித்துக் கொடுத்தேன். பிள்ளைகளும் தமது பரீட்சைகளிலே சிறப்பாகத் தேர்வு பெற்று என் மானத்தைக் காத்தனர். என் கைச்செலவுக்குச் சிறிது பணமும் கிடைத்தது. ஆனால்... ஆசிரியப் பயிற்சியின் பின்னர் தான் கற்பித்தல் சார்ந்த சில அறிமுறைகளைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. இது என் நற்பேறுதான். *(தொடரும்)*

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P.- 021-2225108 www.eezhanadu.com

சிந்தனைக்கு

இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை
மிகல் காணும் கேடு தரற்கு.

-திருக்குறள்

# நமது நோக்கு

## அதிகாரச் சர்ச்சையும் இன அழிப்பில் ஒற்றுமையும்

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கும், பிரதமருக்குமான அதிகார இழுபறி இம்முறை பெரும் சர்ச்சைக்குரியதொன்றாக மாறியிருக்கிறது.

அமைச்சர் மிலிந்த மொறகொடவின் அமைச்சின் கீழ்வரும் அபிவிருத்தி லொத்தர் சபையை, 'எதுவித முன்னறிவித்தலுமின்றி - பிரதமருடனும் கலந்தாலோசிக்காமல் தற்துணிவாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எடுத்துக்கொண்ட விடயமும்,

- இது குறித்த வர்த்தமானி அறிவித்தலை விடுப்பதற்காக அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தில், வர்த்தமானி அறிவித்தல் அச்சாவதைத் தடுப்பதற்காக ஐ.தே.க. ஆதரவாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததும் - அதனைத் தொடர்ந்து அந்த அச்சகம் சீல் வைத்து மூடப்பட்டதுமாக நிலைமை சூடுபிடித்திருக்கிறது.

ஜனாதிபதியும், பிரதமரும் இருவேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், பிரதமர் ரணிலுக்குமான முறுகலும் - பல தடவைகள் முரண்பாடுகளைத் தோற்றுவித்தே வந்தன.

அமைச்சர்களின் பதவிப் பொறுப்பு முதலாக பல்வேறு கட்டங்களிலும் இந்த முரண்பாடுகள் வெளிவந்தபோதும் - தற்போது எழுந்துள்ள சிக்கல், இரு தரப்பும் நேரடியாக மோதுவதற்குத் தயாரானதையே எடுத்துக்காட்டியுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே பல தடவைகள் நேரடிச் சந்திப்புக்கள் நடந்தபோதும், 'சகவாழ்வு அரசியலை' மேற்கொள்வது பற்றி இருதரப்புப் பிரமுகர்களும் பேசியபோதும் - ஐக்கிய தேசியக் கட்சிக்கும், பொதுஜன ஐக்கிய முன்னணிக்குமிடையிலான, குறிப்பாக - சுதந்திரக் கட்சிக்குமிடையிலான வரலாற்றுப் பகைமையுணர்வு - தணிந்ததாக இல்லை.

இந்த இரண்டு பெரும் சிங்கள அரசியற் கட்சிகளும் ஒன்றையொன்று குற்றம் காண்பதிலும், கடுமையாக எதிர்ப்பதிலும் மிகுந்த அக்கறைகாட்டி வந்தமையானது, இலங்கையில் ஆரோக்கியமான போட்டி அரசியலாக இல்லாமல் - குழிபறிப்பும், எதிர்ப்புணர்வும் மேலோங்கிய அரசியலையே உருவாக்கி வந்தது.

ஆனால் - இவ்விருதரப்புக்களிலும் ஒரு ஒற்றுமை இருந்தது. என்னவெனில், இலங்கையில் புரையோடிப் போன இனப்பிரச்சினையைத் தீர்ப்பதிலும், தமிழ்மக்களுக்கு உரிய அதிகாரங்களை வழங்கும் விடயத்தில் - இவை இரண்டுமே கடந்த காலங்களில் ஒத்த நடத்தையையே காட்டிவந்தன.

அதிலும் - காலத்துக்குக் காலம் தமிழ்மக்களை ஒடுக்குமுறைக்காளாக்கியும், அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டும், ஆயுதம் மூலம் தமிழர் உரிமைப் போராட்டத்தைக் கருவறுக்கவும் - இரண்டு சிங்களக் கட்சிகளுமே, பேரினவாதச் சிந்தனையோடும், இன விரோதத்துடனும் செயற்பட்டு வந்ததை தமிழ் மக்கள் மறந்துவிட முடியாது.

ஆட்சியிலிருக்கும்போது ஒரு கட்சி தமிழருக்கான நியாயமான உரிமைகள் பற்றிப் பேசினால் - அதுவும், அவ்வாறு பேசுவதற்கான அரசியற் பின்னணியில் சுயநலம் கலந்திருப்பது வேறுவிடயம் - மற்றைய கட்சி வரிந்து கட்டிக்கொண்டு அதனை எதிர்ப்பதும்,

பின்னர் ஆட்சி மாறியதும், மீண்டும் காட்சி மாறுவதும் புதினமான விடயமாக தமிழ்மக்களுக்கு இருக்கவில்லை.

இந்தவகையில் - இனப்பிரச்சினைத் தீர்வில் மட்டும் ஒத்தபோக்குடன் செயற்பட்டுவரும் இந்தக் கட்சிகள் இரண்டும் - தமக்கான அதிகாரத்தை உரித்தாக்கிக் கொள்வதில் தொடர்ந்தும் மல்லுக்கட்டி நிற்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டிக்கு ஊக்கம் தருவதான இலங்கையின் ஆட்சிமுறையில் - நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி நிர்வாக முறையை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அறிமுகப்படுத்தியது முதலாக - இந்த ஆட்சி முறை ஜனநாயக விரோதமானது என்பதுடன், தமிழ்மக்களுக்கு எதிராகவும் செயற்படுவதற்கும் உறுதுணையாக இருந்தது.

1978 ஆம் ஆண்டு முதலாகத் தொடர்ந்து - பிரதமர் ரணில் அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஒத்துழையாமையும், குழப்பம் விளைவிப்பதுமான செயற்பாடுகள் வரை - நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுறை தமிழினத்திற்கு விரோதமான வகையிலேயே பயன்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான சூழலில் -

இன்று நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற ரீதியில், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - சக ஆட்சியாளரான பிரதமர் மீதும், அமைச்சர்கள் மீதும் தனது அதிகாரப்பலத்தை பிரயோகிக்க முனைந்திருப்பது - இந்த ஆட்சிமுறையினதும், ஆட்சியிலிருப்பவரினதும் சர்வாதிகாரப் போக்கைப் பறைசாற்றுகின்றது.

தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி, அச்சுறுத்த முனையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஒரு புறமும், ஜனாதிபதியை எதிர்க்கும் பலம் தம்மிடமிருப்பதாக அறிவித்திருக்கும் பிரதமர் ரணில், மறுபுறமுமாக - உச்சமாகியிருக்கும் அரசியல் சர்ச்சை, நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி பதவியினை அகற்றுவதற்கு வழிதருமாயின் - அதற்காக மகிழ்ச்சியடையும் முதற்தரப்பு தமிழ்மக்களாகவே இருக்க முடியும்.

# இருதய சத்திர சிகிச்சைக்காக 4102 நோயாளர் காத்திருப்பு!

கொழும்புத் தேசிய வைத்தியசாலையில் - இருதய சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வதற்காக, 4102 பேர் காத்திருப்பதாகத் தெரியவருகிறது.

வைத்திய வசதிகளின்மை, வைத்தியர்கள் பற்றாக்குறை போன்ற காரணங்களாலேயே, பெருமளவான நோயாளர்கள் சத்திர சிகிச்சைகளுக்காகக் காத்திருக்கவேண்டியுள்ளனர்.

கடந்த 2001 ஆம் ஆண்டில் - கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 2,710 பேருக்கும், கராப்பிட்டிய வைத்தியசாலையில் 565 பேருக்கும் இருதய சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிலையில் தற்போது சத்திரசிகிச்சைகளைச் செய்து முடிக்க இரண்டு வருடங்கள் செல்லலாம் என்றும், அவசர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவேண்டிய இருதய நோயாளர்கள் இவ்வாறு காத்திருப்பது ஆபத்தானது எனவும் வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால் - கண்டி வைத்தியசாலையிலும் இருதய சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளச் சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துவருகிறது.

# கடைகளுக்கு வெளியே பொருட்களை வைத்து விற்க கட்டுப்பாட்டுடன் அனுமதி

## மாநகர சபை - வணிகர் கழக பேச்சில் முடிவு

(யாழ்ப்பாணம்)

நவீன சந்தையில் உள்ள, ஒவ்வொரு வர்த்தக நிறுவனத்திற்கும் முன்பாக - கதவில் இருந்து இரண்டு அடி முன்னால் பொருட்கள் வைத்து விற்பனை செய்வதற்கு அனுமதிப்பதென முடிவெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.நவீன சந்தைக் கடைகளுக்கு முன் நடைபாதையில் விளம்பரத்துக்கு பொருட்கள் வைப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த தடிகள், இறாக்கைகள், அண்மையில் - யாழ்.மாநகர சபையினால் அகற்றப்பட்ட விடயம் தொடர்பாக கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.மாநகரசபையில் கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

மாநகர ஆணையாளர் மற்றும் நிர்வாகத்தினருடன் யாழ். வணிகர் கழகத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நடத்திய கூட்டத்தின்போது இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலின்போது -

யாழ்.நவீன சந்தைத் தொகுதியின் உட்புறமும் வெளிப்புறமும் உள்ள கடைகளின் வாசலின் முன்னாலுள்ள நடைபாதையில் இரண்டு அடிவரை பொருட்கள் வைப்பதற்கும், மேலே தொங்கவிடுவதற்கும் சகல வர்த்தகர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# புரிந்துணர்வு உடன்பாட்டின் பின் 8,000 படையினர் தப்பியோட்டம்!

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் - இராணுவத்திலிருந்து 8 ஆயிரம் பேர் தப்பியோடியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் காலத்தில் - ஆட்சேர்ப்பு நிகழ்ந்தபோது, 500 பேர் மட்டுமே இராணுவத்தில் இணைய வந்தனர்.

வடக்கு - கிழக்கில் கடமைபுரியும் இராணுவத்தினர், பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குவதால்தான் அவர்கள் இராணுவத்திலிருந்து தப்பிச்சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினருக்கென பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டிருந்தும், அவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கிவருவதாக, வடக்கு - கிழக்குப் பகுதிகளிலுள்ள படையினர், அரசுக்கு முறையிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்குப் படையினர் விடுமுறையில் செல்லும் கப்பலில் - அடிப்படை வசதிகள் இல்லாததனால், அந்தக் கப்பலில் பிரயாணத்தை மேற்கொள்வதற்குப் படையினர் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# கஞுத்துறைத் தமிழ் கைதிகள் இடம்மாற்றப்பட்டதற்கு எதிர்ப்பு!

(யாழ்ப்பாணம்)

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியற் கைதிகள், தாம் போதிய வசதிகளற்ற 'எவ்' பிரிவுக்கு மாற்றப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்துவருகின்றனர்.

முன்னர் தமிழ் அரசியற் கைதிகள் சிறையின் 'பி' பிரிவில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். இப்பிரிவில், 350 கைதிகளைத் தங்கவைக்க முடியும்.

வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்த 300 கைதிகள் களுத்துறைக்கு மாற்றப்பட்டதையடுத்து, 'பி' பிரிவிலிருந்த தமிழ் அரசியற்கைதிகள் 'எவ்' பிரிவுக்கு மாற்றப்பட்டனர். 'எவ்' பிரிவில் 100 பேர் மட்டுமே தங்கமுடியும்.

சிறைச்சாலையின் 'சி' மற்றும் 'ஈ' பிரிவுகள் - பாதுகாப்புக் காரணங்களுக்காக மூடப்பட்டுள்ளன. இந்த நிலையிலேயே அவர்கள் 'எவ்' பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

# ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு; ரணில் - சந்திரிகா சந்திப்பர்!

புதிய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்குவது சம்பந்தமாக, ஜனாதிபதிக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில், அடுத்த சில தினங்களில் சந்திப்பொன்று நிகழலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்கி, நாடாளுமன்றத்துக்கு அதிக அதிகாரம் வழங்குவது சம்பந்தமாக, இக்கலந்துரையாடல் அமையலாம் என்று கூறப்படுகிறது.

இதன் பிரகாரம் - நிறைவேற்று அதிகாரங் கொண்ட ஜனாதிபதிக்குப் பதிலாக, கூடிய அதிகாரங்களைக் கொண்ட பிரதம மந்திரியை நியமிப்பது பற்றியும் இக்கலந்துரையாடலில் ஆராயப்படலாமென்றும் அறியவருகிறது.

இதேவேளை - இந்தக் கலந்துரையாடலில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுறை ஒழிப்பதுபற்றி ஒரு தீர்க்கமான முடிவு எடுக்கப்படலாம் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# அரச ஊழியர் இடமாற்றம்; புதிய நடைமுறை விரைவில்!

## அமைச்சர் அலிக் அலுவிகார அறிவிப்பு

உள்நாட்டவலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சின் கீழ் பணியாற்றும் திணைக்கள ஊழியர்களுக்கான புதிய இடமாற்ற நடைமுறை, விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் அலிக் அலுவிகார தெரிவித்தார்.

இந்தப் புதிய திட்டத்தின்படி - ஊழியர் ஒருவர் ஐந்து வருடங்களே ஓர் அலுவலகத்தில் பணியாற்ற முடியும். இதன் பின்னர் வேறு அலுவலகங்களுக்கு இடமாற்றம் வழங்கப்படும். இதன்மூலம் அலுவலக நடைமுறைகளைச் சீரமைத்துக் கொள்ளமுடியும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# கடந்த ஒரு வருட காலத்தில் 2000 படையினர் காக்கப்பட்டனர்

## அமைச்சர் ராஜித சேனாரட்ன

போர்நிறுத்தம் நடைமுறையிலுள்ளதால்தான், கடந்த ஒரு வருடமாக இரண்டாயிரம் படையினர் உயிரிழக்காமல் காப்பாற்றப்பட்டனர் என காணி அமைச்சர் ராஜித சேனாரட்ண நாடாளுமன்றில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் பேசும் போது - ஜனாதிபதி சொல்வதுபோல, நாம் நாட்டின் பாதுகாப்பைக் கவனயீனமாக விடவில்லை. விமானப்படை - அமெரிக்க உதவி மூலம் தரமுயர்த்தப்பட்டிருக்கிறது. கடற்படைக்கும் உதவிகள் கிடைத்துள்ளன என்றார்.

# தப்பியோடிய படையினருக்கு சம்பளம் வழங்கியதாக மோசடி!

தப்பியோடிய இராணுவத்தினருக்கு - சம்பளம் கொடுக்கப்பட்டதாகக் கணக்குக்காட்டி 7 இலட்ச ரூபா பணம் மோசடி செய்யப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. இது தொடர்பாக இரகசியப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். மின்னேரியாவிலுள்ள முகாம் ஒன்றிலேயே இம்மோசடி இடம்பெற்றுள்ளது.


### நெடுந்தீவில்

# துறைமுகம் ஆழமாக்கப்படாததால் தரை தட்டும் பயணிகள் படகுகள்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுத்துறைமுகப் பகுதி ஆழமாக்கப்படாமையால், பயணிகள் படகுச் சேவைகள் சீரற்றநிலையில் உள்ளன.

நெடுந்தீவிலிருந்து முக்கியமான வெளியிடப் போக்குவரத்துத் தொடர்புகளுக்குப் படகுச் சேவையை மட்டுமே நம்பியிருக்க வேண்டியுள்ளது.



அழகுகொஞ்சும் நெடுந்தீவுத் துறைமுகம்.

மாவிலித்துறைமுகப் பகுதி ஆழமாக்கப்படாமையினால் பயணிகள் படகுகள் தரைதட்டும்நிலை தொடர்கின்றது. இதனால், படகுகள் பழுதடைவதுடன், மக்கள் போக்குவரத்தும் தாமதப்படுகிறது. சிலவேளைகளில் போக்குவரத்து தடையும் ஏற்படுகின்றது.

தற்போது கடல் வற்றும் காலமாதலால், இவ்வாறான அசௌகரியங்களை மக்கள் தொடர்ந்து அனுபவிக்கின்றனர்.

விரைவாக நடவடிக்கை எடுத்து துறைமுகப்பகுதிக் கடலினை ஆழமாக்கி, மக்கள் சீரான பயணத்தை மேற்கொள்ள ஆவனசெய்ய வேண்டுமென நெடுந்தீவு மக்கள் தெரிவித்தனர். (113)

# சங்கத்தானையில் மிதிவெடிகளை அகற்றுவதில் இராணுவம் ஈடுபாடு!

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக்கல்லூரியைச் சூழவுள்ள சங்கத்தானைப் பிரதேசத்திலுள்ள பற்றைக் காணிகளில் படையினர் துப்பரவுப்பணியை மேற்கொண்டு வருகின்றனர். சங்கத்தானைப் பகுதியில் வெடிபொருட்கள் இருக்கலாம் எனச் சந்தேகிக்கும் இடங்கள் பற்றி இராணுவத்தினருக்கு மக்கள் அறிவித்ததைத் தொடர்ந்தே, வெடிபொருட்களை அகற்றும் இராணுவப் பிரிவினர் துப்பரவுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த காலங்களில் இப்பகுதியில் குப்பைகள் கொழுத்திய வேளையில் - வெடிபொருட்கள் வெடித்தும், மிதிவெடிகள் வெடித்தும் காயங்களும், உயிர்ச்சேதங்களும் ஏற்பட்டிருந்தன. இப்பகுதியில் கடந்தகால யுத்தத்தின்போது ஏராளமான வெடிபொருட்கள் புதைக்கப்பட்டுள்ளதாக மக்கள் அஞ்சுகின்றனர். மிதிவெடி அடையாளப்படுத்தும் பலகைகள் நடப்பட்டுப் பல மாதங்கள் ஆகியும் இப்பகுதியில் இதுவரை மிதிவெடிகளை அகற்ற எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இது குறித்து மக்கள் இராணுவத்தினருக்கு அறிவித்ததை அடுத்தே அவர்கள் துப்பரவுப்பணியை மேற்கொண்டு வருகின்றனர். (34)

# மீசாலை கிழக்குப் பகுதியில் மின்விநியோகம் தடைப்பட்டது!

## ஜெனரேற்றர் பழுதடைந்ததே காரணம்

(மட்டுவில்)

தென்மராட்சி- மீசாலை கிழக்கு மற்றும் புத்தூர்ச் சந்திப் பகுதிகளுக்கான மின்சார விநியோகம் கடந்த சில நாட்களாகத் தடைப்பட்டுள்ளது.

புத்தூர்ச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள ஜெனரேற்றர் மூலமே இந்தப் பகுதிக்கான மின்சார விநியோகம் வழங்கப்பட்டு வந்தது. இந்த ஜெனரேற்றர் பழுதடைந்ததாலேயே அப்பகுதிக்கான மின்விநியோகம் தடைப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் சட்டவிரோத மின்பாவனை அதிகமாக இருந்ததாலேயே ஜெனரேற்றர் பழுதடைந்ததாகவும், சட்டவிரோத மின்பாவனையாளரைக் கட்டுப்படுத்தினாலேயே கிரமமான முறையில் மின்சாரத்தைப் பெறமுடியும் என்றும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, மீசாலை வாகையடிச் சந்தியில் பொருத்தப்பட்டுள்ள ஜெனரேற்றர் மூலம் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு மின்சார விநியோகம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (37)

# யாழ்.குடாநாட்டில் தற்கொலை செய்வோர் தொகை அதிகரிப்பு

யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலமாகத் தற்கொலைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

20 இற்கும் 50 இற்கும் இடைப்பட்ட வயதினரே தற்கொலைக்கு முயற்சித்து வருகின்றனர். நஞ்சருந்தியும், எரிபொருளை உடலில் ஊற்றி எரித்துமே அதிகமானோர் தற்கொலைக்கு முயற்சி செயதிருப்பதாகத் தெரியவருகிறது.

கடன்சுமை, மன உளைச்சல், விரக்தி போன்ற பல்வேறு காரணங்களாலேயே அதிகளவானோர் தற்கொலைக்கு முயற்சிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வன்னிப் பகுதியிலிருந்த வாகனங்கள்

# அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு பிரதேச செயலர் உறுதிப்படுத்த வேண்டும்

## மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் அறிவிப்பு

(வவுனியா)

வன்னிப்பகுதியில், இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் 1996 ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டு வரை பாவனையில் இருந்த வாகனங்களுக்கு மட்டும் வருமான வரி நீக்கப்பட்டு 2002, 2003 ஆம் ஆண்டுகளுக்கான வாகன உரிமம் வழங்க, வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரின் அனுமதி வழங்கப்பட்டது.

இதனால் தற்போது வன்னிப் பகுதியிலிருந்து ஏனைய மாவட்டங்களுக்கு வாகனங்களை எடுத்துச் செல்லக்கூடியதாக உள்ளது. இவ்வாறு எடுத்துச் செல்லப்படும் வாகனங்கள் பாவிக்கப்படும் பிரதேசங்களிலேயே உரிமம் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதற்கென, 1996 முதல் 2002 வரை வன்னிப் பகுதியில் வாகனம் இருந்தமைக்கான ஆதாரத்தை வன்னிப்பகுதிப் பிரதேச செயலர்கள் உறுதிப்படுத்தினால் மாத்திரமே 2002, 2003 ஆம் ஆண்டுகளுக்கான உரிமம் வழங்கப்படும்.

1996 - 2002 வரையான காலப் பகுதிக்கான வரி அறவீடு தொடர்பான அறிவுறுத்தல்கள் விரைவில் அறிவிக்கப்படுமெனவும், சகல பிரதேச செயலகங்களுக்கும் வடக்கு-கிழக்கு மாகாணசபை மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் அறிவித்துள்ளார். (113)

# தேவாலயங்களில் இயங்கும் இரண்டு பாடசாலைகள்

(யாழ்ப்பாணம்)

மருதங்கேணிப் பகுதியில் இரு பாடசாலைகள் கடந்த பத்து மாதங்களாகத் தேவாலயங்களில் இயங்கி வருகின்றன.

தாளையடி றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்கப் பாடசாலை ஆகியவையே தேவாலயங்களில் இயங்கிவருகின்றன.

இவ்விரு பாடசாலைகளும் கடந்த கால யுத்தத்தில் சேதமடைந்துள்ளன.

எனவே, இப்பாடசாலைகளுக்குத் தற்காலிகக் கொட்டகைகளை அமைதது்த் தருமாறு இப்பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கங்கள் அரசஅதிபரிடம் கோரியுள்ளன. (34)

# கூரையைப் பிரித்து கடையில் திருட்டு!

(ஆழியவளை)

இரவுவேளையில் கடையின் கூரையைப் பிரித்து உட்புகுந்த திருடர்கள்- மூவாயிரம் ரூபா ரொக்கப் பணத்தையும், சுமார் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களையும் திருடிச்சென்றுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு உடுப்பிட்டிச் சந்திக்கு அண்மையில் இச்சம்பவம் இடம்பெற்றது. ஜெயராசா என்பவரது உணவுச்சாலையே கொள்ளையிடப்பட்டது.

இச்சம்பவம் பற்றி கடை உரிமையாளர்- வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (122)

# சங்கீத சபை நடத்தவுள்ள பரீட்சைக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீத சபையினால் நடாத்தப்படும் சங்கீதம், மிருதங்கம், நடனம் (பரதம், கதகளி), நாடகமும் அரங்கியலும், பண்ணிசை ஆகிய பாடங்களில், தரம் 5,6 இல் தோற்றுவோருக்கான கருததரங்கு எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

தினமும் காலை 8 மணிமுதல் பி.ப 5 மணிவரை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இக் கருத்தரங்கு நடைபெறுமென்று வட இலங்கை சங்கீதசபையினர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி தரங்களுக்கான செய்முறைப் பரீட்சைக்குரிய நேரசூசிகை, அனுமதி அட்டை என்பன தேர்வு நாடிகளுக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேற்படி தரங்களுக்குரிய செய்முறைப்பரீட்சைகள் எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சபையினால் நடாத்தப்படும் தரம் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கிற்குரிய செய்முறைப் பரீட்சைகள் கடந்த ஏப்ரல் மாதம் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வாழ்க வளமுடன்
HAPPY BIRTHDAY
முதலாவது அகவையில்
பெயர் : கு.ஜெனுஜன்
முகவரி :34, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.



ஏழாவது அகவையில்



பெயர் : மோ.தனுஷா
முகவரி : அராலி மத்தி வட்டுக்கோட்டை.
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்
வாழ்க வளமுடன்
சிறாரின் பெயர்:------------------------------------
முகவரி :------------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
------------------------
பெற்றார் ஒப்பம்

# திருகோணமலையில் நடைபெற்ற அதிகாரிகள் பயிற்சி நிறைவு விழா நிகழ்விலிருந்து....







திருமலையில் நடைபெற்ற போராளிகளுக்கான- அதிகாரிகள் தரப் பயிற்சி நிறைவு விழாவில், மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் பதுமன் தேசியக் கொடியேற்றுவதை முதற்படத்திலும், ஈகச் சுடரை தமிழர் புனர்வாழ்வுக்கழக திருமலை மாவட்ட இணைப்பாளர் பொ.மாதவராசா ஏற்றுவதை இரண்டாவது படத்திலும், விழாவுக்கு கேணல் பதுமன், தாக்குதல் தளபதி மது, திருமலை அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக், ஆகியோர் அழைத்துவரப்படுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.







பயிற்சியில் திறமை காட்டிய போராளி சுடரொளிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் பரிசு வழங்குவதை முதற்படத்திலும், பயிற்சி பெற்ற போராளி ஒருவருக்கு கேணல் பதுமன் சான்றிதழ் வழங்குவதை இரண்டாவது படத்திலும், திருமலை அரசியற் பொறுப்பாளர் திலக் உரையாற்றுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.





போராளிகள் அகவணக்கம் செலுத்துவதை முதலாவது படத்திலும், பயிற்சிபெற்ற போராளிகளில் ஒரு பகுதயினரை இரண்டாவது படத்திலும் காணலாம் (படங்கள்:கௌதமன்)

## பைந்தமிழ் ஆற்றலை பறைசாற்றும் உலகம் பரவிய தமிழின் வேர் - கல்

சென்னை கிறிஸ்தவக் கல்லூரி தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் கு.அரசேந்திரனின் 'உலகம் பரவிய தமிழின் வேர்-கல்' என்னும் நூலின் அறிமுக விழா, இன்று பி.ப.3.30 மணிக்கு யாழ். பல்கலைக் கழக நூலகக் கேட்போர்கூடத்தில் நடைபெறவிருக்கிறது. இவ்விழாவிற்கு தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா தலைமை தாங்குவார்.

இந்நூலை வரலாற்றுத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ப.புஷ்பரத்தினம் அறிமுகம் செய்துவைக்க, தமிழ்த்துறைப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் நூலுக்கான ஆய்வுரையை நிகழ்த்துவார்.

'உலகம் பரவிய தமிழின் வேர்-கல்' என்னும் நூல், நான்கு பகுதிகளாக வெளிவந்துள்ளது. தமிழ்மொழியின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமையும் இந்நூல், 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ தலைமையில், சென்னையில் தேவநேயப் பாவாணர் அரங்கில் வெளியிடப்பட்டது.

இந்நூலுக்கு - பழ.நெடுமாறன், புரட்சியப்புயல் வைகோ ஆகியோர் அணிந்துரை அளித்துள்ளனர். இந்நூலின் பெருமைபேச இவ்வணிந்துரைகளே சான்று கூறும்.

எனினும், உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் வழங்கியுள்ள பாடல் வடிவில் அமைந்துள்ள அணிந்துரை இந்நூலின் புகழை உச்ச நிலைக்கு அழைத்துச் செல்கிறது. அவர் சூட்டியுள்ள பாமாலை -

*கல்லெனும் அரசேந்திரன் சொல்லாய்வு நூல்*
*வல்ல செந்தமிழின் தொல் புகழ் சொல்லும்!*
*கருமை கூட்டம் இருமுதற் பொருளாய்ச்*
*செலவு கூர்மை வெப்பம் துளை என*
*நிலவும் ஏனை நாளிலைப் பொருளாய்ப்*
*பாரின் திசையெல்லாம் பரவிய கல்லின்*
*வேரின் தொன்மை விளம்பும் இந்நூல்*
*முந்தை எபிரேயம் முது பழஞ்சீனம்*
*பிந்தை மேலைக் கீழை ஆரியம்*
*உயிர்க்க மூலமாய் ஓங்கிய தமிழரின்*
*இயற்கை மாண்பினை எடுத்து மொழிவதாம்!*
*வண்டமிழ் ஆற்றல் கொண்டெழுமிந்நூல்*
*எண்டிசை நெருப்பாய் எரியும் எரியும்!*
*வீசு புயலை இதுவிளைவிக்கும்!*
*இக்கல் தமிழ்விடிவின் அக்கல்எமை*
*நக்கல் செய் பகைவர்க்கிது நடு கல்லே!*

என்று கவிஞர் காசி ஆனந்தன் கூறியுள்ளதற்கமைய,

*வண்டமிழ் ஆற்றல்கொண்டெழு மிந்நூல்*
*எண்டிசை நெருப்பாய் எரியும் எரியும்!*
*வீசு புயலை இதுவிளைவிக்கும்!!*

- பேராசிரியர் அரசேந்திரனின் ஆற்றலை நன்குணர்ந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழ் வளர்ச்சிக் கழகம், வன்னியில் இவருக்கு எடுத்துள்ள பெருவிழா, பேராசிரியர் அரசேந்திரனின் பைந்தமிழ் ஆற்றலைப் பாரெங்கும் பறைசாற்ற துணைநிற்பது உறுதி.

**- மா.க. ஈழவேந்தன் -**

## கிளிநொச்சி விபத்தில் ஒருவர் காயம்

மோட்டார் சைக்கிளும், சைக்கிளும் மோதியதில், ஒருவர் படுகாயமடைந்த நிலையில் - யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

கடந்த 9 ஆம் திகதி, கண்டி வீதி கிளிநொச்சியில் இடம்பெற்ற இவ்விபத்தில், திருவையாறு கிளிநொச்சியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை மகாநேசன் (வயது-58) என்பவரே படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ரா,சு)

## தமிழ்மொழித்திறன் போட்டித் திகதிகள் மாற்றம்

2003 ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை தமிழ்மொழித்திறன் போட்டிகள் நடத்தப்படும் திகதிகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி - பாடசாலை மட்டப் போட்டிகள், ஜூன் 27 ஆம் திகதிக்கு முன்னரும், வலய மட்டப் போட்டிகள் ஜூலை 18 ஆம் திகதிக்கு முன்னரும், மாகாணமட்டப் போட்டிகள் செப்ரெம்பர் முதலாம் திகதிக்கு முன்னரும் நடைபெறவுள்ளன.

தேசியநிலைப் போட்டிகளுக்கான விண்ணப்பங்களை செப்ரெம்பர் 8 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கும்படி தமிழ்மொழிப் பிரிவின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.நடராஜா அறிவித்துள்ளார்.

## ஒன்றுகூடல்

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையில், கணினிப் பயிற்சியைப் பூர்த்தி செய்து வெளியேறிய மாணவர்களுக்கான ஒன்று கூடல் வைபவம் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் - யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் மற்றும் கூட்டுறவுச்சபை உறுப்பினர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். (128)

## கிழக்குக் கடலில் தாழமுக்க மையம்

(கொழும்பு)

மட்டக்களப்பிலிருந்து 800 கிலோ மீற்றர் கிழக்காக, வங்காள விரிகுடாவில் மையம் கொண்டிருந்த தாழமுக்கம், நேற்றுக்காலை முல்லைத்தீவில் இருந்து 650 கிலோ மீற்றர் தூரத்தில் காணப்பட்டது என வளிமண்டலவியல் திணைக்கள அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

தற்போது மேற்கு, வடமேற்குத் திசையில் இந்தத் தாழமுக்கம் நகர்ந்து கொண்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

வடக்கு-கிழக்கு கடற்பிரதேசத்திலும், தெற்கு பிரதேசத்திலும் இடையிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்வதுடன், கடற்பிரதேசம் கொந்தளிப்பாகவும் இருக்கும் என வளிமண்டலவியல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## சுயம்...

என் அடுத்தகட்ட முடிவில்தான் தங்கைகளின் வாழ்வா?

அப்படியும் இப்படியுமாக நடந்த அப்பா, சுவருடன் சாய்ந்தபடி குலுங்கிக் குலுங்கி அழுதார். என் இருபத்திரண்டு வயதிலும் காணாதகாட்சி.

என் பார்வையில் அப்பா பெரிய மலையாகத்தான் உருவகப்படுத்தப்பட்டிருக்கிறார். எதற்கும் அஞ்சாதவர்... எதையும் தாங்கவல்லவர். அந்த அப்பாவா அழுகிறார்?

என்னைத் தாலாட்டிச் சீராட்டி வளர்த்த அப்பா இன்று என் காரணமாக அழுகின்றாரா?

"அப்பா... அப்பா...ஏன் அழுறியள்.. இப்ப என்ன நடந்ததெண்டு...' ஓடிப்போய் அப்பாவைக்கட்டிப் பிடித்துக் கொண்டேன்.

நிமிர்ந்து என்னைப் பார்த்தார். அதற்குள்ளாக நிறைய அழுதிருந்தார். "பிள்ளை என்ர கடைசிக் காலமிது...நான் போயிடுவன். ஆனால் நீங்கள் எல்லாரும் சந்தோசமாயிருக்க வேணும். நீ காதலிச்சுக் கட்டலாம். ஆனால் எங்கட சொந்தங்களைப் பற்றித் தெரியும்தானே. கிட்டவும் அண்டாதுகள். நாளைக்கு நீ கட்டின இடத்திலயும் எப்படியெண்டு சொல்லேலாது. அதைவிட காதலிச்சுக் கட்டின பெட்டையளின்ர தங்கச்சியளைச் செய்து குடுக்குறதுக்குப் பெற்றதுகள் படுறபாடு... "அப்பா முடிக்காமலே மீண்டும் அழத் தொடங்கினார்.

அப்பா.. அழாதேங்கப்பா... அப்பா நான் காதலிக்கயில்லை... கலியாணமும் கட்டயில்லை... உங்களோடயேயிருக்கிறேன்...அழாதேங்கப்பா..." என்னாலும் கட்டுப்படுத்த முடியவில்லை. அப்பாவைக் கட்டிப்பிடித்து அழுதேன்.

என் தலையை நிமிர்த்திக் கண்ணீரைத் துடைத்தார்.

"பிள்ளை அப்படிச் சொல்லாத... உன்ன நான் நல்ல இடத்தில கட்டி வைக்கிறன்" என்று விட்டு எதையோ நினைத்தவராக 'விறுவிறு' என வெளியே போனார்.

அப்பா சொன்னதைக் கேட்டு விரக்தியாகச் சிரித்துக் கொண்டேன்.

பாவம் அப்பா தவறாகப் புரிந்து கொண்டுவிட்டார். என் மனவிருப்பைப் புரியாது... என் சுயத்தைப் புரியாது திருமணத்திற்கு ஆசைப்படுவதாகப் புரிந்துகொண்டுவிட்டார்.

அறையைப் பூட்டிவிட்டு வந்து படுக்கையில் வீழ்ந்தேன். மனதில் ஏராளம் விரக்தி நிறைந்திருந்தது. ஆனால் அழவில்லை... மனம் குமுறவில்லை... மனதுக்குள் பிரசவ சுகம் இருக்கவில்லை.

பிறந்தும் ஒரு நாளாகாத என் சுயம் அப்போதே மெது மெதுவாக இறந்துபோகத் தொடங்கியது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சமாதானப் பேச்சை வலியுறுத்தி அடுத்த மாதம் சர்வமதப் பேரணி!

## நீதிக்கும் சமாதானத்துக்குமான உலக ஒத்துழைப்பு மன்றம் ஏற்பாடு




நீதிக்கும், சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்றத்தின் இலங்கைக் குழுவின் ஏற்பாட்டில், அடுத்த மாத நடுப்பகுதியில் சமாதானப் பேரணியொன்று நடாத்தப்படவுள்ளது. இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி, சர்வமதத் தலைவர்களும் இணைந்து இப்பேரணியை நடத்தவுள்ளனர்.



சமாதானப் பேரணி தொடர்பான கலந்துரையாடலில் யாழ். மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் பரமநாதன் உரையாற்றுகிறார்.

இது தொடர்பான கலந்துரையாடலொன்று நேற்றுப் பி.ப. 2 மணிக்கு சென்.ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட மனிதநேய அமைப்புக்கள் ஒன்றியத் தலைவர் பரமநாதன் உரையாற்றுகையில், உயர்பாதுகாப்பு வலயம் என்று இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் 30 வீதமான விவசாயக் காணிகள், வலி. வடக்கு மற்றும் தென்மராட்சிப் பகுதிகளில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

இதனால் மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற முடியாது தவிக்கின்றனர். இதேபோல், கடற்கரையோரங்கள் இராணுவ முகாம்களாக்கப்பட்டு, மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடிக்கச் செல்லமுடியாத நிலையுள்ளது.

யாழ். குடாநாட்டில் - முன்னர் வருடமொன்றுக்கு 20 ஆயிரம் மெற்றிக் தொன் மீன் பிடிக்கப்பட்டது.

ஆனால், இன்று 3 ஆயிரத்து ஐநூறு மெற்றிக்தொன்னே பிடிக்கக்கூடியதாகவுள்ளது. இதனால் மீனவர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். கைத்தொழிற் தொழிற்சாலைகள் பல இன்று இயங்கமுடியாத நிலையில் உள்ளன. பலர் வேலைவாய்ப்பின்றி இருக்கின்றனர்.

உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசம் அகற்றப்பட்டு மக்கள் மீளக்குடியேறி வாழக்கூடிய சுமுக நிலை ஏற்படவேண்டும் என, கொழும்பிலிருந்து வருகைதந்த குழுவினருக்கு யாழ். மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் பரமநாதன் வலியுறுத்திக் கூறினார்.

# அமெரிக்க அமைச்சரை சந்திக்க மல்வத்த மகாநாயக்கர் மறுப்பு!

அமெரிக்க தெற்காசியப் பிராந்திய விவகார அமைச்சர் கிறிஸ்ரினா றொக்காவைச் சந்திப்பதற்கு, மல்வத்த மகாநாயக்கர் வண. ரம்புக்வெல விபஸி தேரோ மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள் விஜயமாக அமெரிக்க தெற்காசிய விவகார அமைச்சர் கிறிஸ்ரினா றொக்கா நேற்று கொழும்பு வந்துசேர்ந்தார்.

இவர், மல்வத்தை மகாநாயக்கரைச் சந்திப்பதற்கு விரும்பியிருந்தார். இது தொடர்பாக அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் மல்வத்த மகாநாயக்கரை நேரில் சென்று பார்த்து, சந்திப்புக்கான நேரத்தை ஒதுக்கித் தருமாறு கேட்டிருந்தனர்.

எனினும், கிறிஸ்ரினா றொக்காவைச் சந்திக்க மல்வத்த மகாநாயக்கர் ரம்புக்வெல விபஸி தேரோ மறுத்துவிட்டார்.

இதேவேளை, அஸ்கிரிய பீடாதிபதி வண.புத்திரகித்த நாயக்க தேரோவை நாளை செய்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கிறிஸ்ரினா றொக்கா சந்தித்துப் பேசவுள்ளார்.

இவர், கண்டி தலதா மாளிகை மீது 1997ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பான புகைப்படத்தொகுப்பையும் பார்வையிடவுள்ளார். அத்துடன் பேராதனை தாவரவியல் பூங்காவுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

## பொ.ஐ.மு. அலுவலகம் மீது தாக்குதல்

நாவலப்பிட்டி நகரிலுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணியின் அலுவலகம் நேற்று இனந்தெரியாத நபர்களினால் தாக்கப்பட்டது.

நேற்றுமாலை 5 மணிக்கு அலுவலகத்தின் முன்பாகக் கூடிய இனந்தெரியாத நபர்கள் அலுவலகத்தைத் தாக்கத் தொடங்கினர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட போது, பொலிஸார் முறைப்பாட்டினை ஏற்கமறுத்தனர்.

இதனால் ஆத்திரமடைந்த நாவலப்பிட்டி தொகுதி பொ.ஐ.மு அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான மகிந்தாநந்த அளுத்கமகே தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்கள், நேற்றிரவு 7.30 மணிவரை நாவலப்பிட்டி - கண்டி வீதியை வழிமறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (01)

### பாலாவுக்கு....

விமான நிலைய விடுதியில் தங்கியிருந்த கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தம்பதிகள் இன்று அதிகாலை லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றனர். திடீரென ஏற்பட்ட சுகவீனத்தாலேயே கலாநிதி அன்ரன் பாலசிங்கம் லண்டனுக்குத் திரும்பவேண்டி வந்ததாகத் தெரியவருகிறது.

### சந்திரிகாவை...

பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. அமைச்சர்கள் ராஜித சேனாரட்ண, காமினி லொக்குகே, மகிந்த விஜேசேகரா ஆகியோர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

# அரசியலமைப்புக்கு அபகீர்த்தியாக ஜனாதிபதி சந்திரிகா நடக்கமாட்டார்

## பொ.ஐ.மு. ஊடகப்பேச்சாளர் தகவல்

நாட்டின் அரசியலமைப்புக்கும், தனது பதவிக்கும் அபகீர்த்தி ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளப் போவதில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க உறுதி கூறியுள்ளதாக பொதுஜன ஐக்கிய முன்னணி ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

அபிவிருத்தி லொத்தர் சபையை சட்டத்துக்கு உட்பட்ட வகையிலேயே ஜனாதிபதி சந்திரிகா பொறுப்பேற்றுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே சரத் அமுனுகம மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கடந்த இரண்டு மாதகாலமாகத் தேசிய லொத்தர் சபை எந்தவித நிதியையும் ஜனாதிபதி நிதியத்துக்குச் செலுத்தவில்லை. நோர்வே அரசாங்கத்துக்குத் தேசிய லொத்தர் சபையைக் கையளிக்கும் அரசாங்கத்தின் திட்டத்தைத் தமது கட்சி கண்டனம் செய்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கடற்பாதுகாப்பு...

தளபதிகள், கடற்படை நடவடிக்கை இயக்குநர் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

அத்துடன், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் ஜெனரல் ரெலவ்ஸனையும் சந்தித்திருந்தார்.

வைஸ் அட்மிரல் ஜேக்கப் தனது அறிக்கையை அரசாங்கத்திடம் கையளிக்கவுள்ள[illegible] கடற்கண்காணிப்புப் பிரச்சினை தொடர்பாகப் பல்வேறு இடங்களுக்கும் விஜயம் செய்து பார்வையிடவுள்ளார்.

வைஸ் அட்மிரல் ஜேக்கப்பின் அறிக்கையை அடுத்தே கடற்பிரச்சினை தொடர்பான, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு சிபார்சுக்கான பதில் வழங்கப்படும் என்றும் தெரிவி[illegible]டுகிறது.

## குமாருக்கான மாமனிதர்...

தீவிரபங்கெடுக்காதவராக இருந்துங்கூட, போராட்டத்தின் வளர்ச்சிப் பாதையையும் அதனை வழிநடத்துகின்ற தலைமையின் மதிநுட்பத்தையும் நன்கு அவதானித்த ஓர் அரசியல் மாணவன் என்றவகையில் முக்கியமான காலகட்டத்தில் விடுதலைப்போராட்டத்திற்கு தனது பங்களிப்பை வழங்கிவந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழ் மக்களின் விடுதலையின்பால் கொண்ட விசுவாசம், வழங்கிய ஈகம், காட்டிய அர்ப்பணிப்பு என்பனவற்றால் இவர் வெகுவாக ஈர்க்கப்பட்டதாக அடிக்கடி கூறுவதுண்டு. விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மீது முழு நம்பிக்கை வைத்து தமிழ்மக்களின் அரசியல் விடுதலை - அவர் காலத்திலேயே நடக்குமென்று தீர்க்கதரிசனமாகச் சொன்னவர்களில் அமரர் முதலிடம் வகிக்கின்றார். சிறிலங்காவில் தமிழ் மக்களின் அரசியல் தலைமைத்துவத்தை பிரபாகரன் போல் வேறு எவரும் வகிக்கவில்லை என்பது அன்னாரின் கருத்தாக இருந்தது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு விசாரணைகள் ஏதுமின்றி சிறைகளில் வாடிய தமிழ் இளைஞர், யுவதிகளுக்காக நீதிமன்றுகளில் தோன்றி வெற்றிகரமாக வாதாடினார். சர்வதேச மன்றுகளில், அதுவும் குறிப்பாக ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன் தோன்றி இலங்கைத் தமிழ்மக்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் அடிப்படை மனிதஉரிமை மீறல்களுக்கு உள்ளாகித் துன்புறுவதைச் சான்றிதழ்களுடன் நிரூபித்தார். இவற்றுக்கெல்லாம் அமரர் பெற்றுக்கொண்டது எதிரிகளின் துப்பாக்கிக்குண்டு வழங்கிய சாவேயாகும். இவரது சேவையினை தமிழினம் என்றென்றும் நினைவுகூறும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


## கண்ணீர் அஞ்சலி

10.05.2003 அன்று இறைபதமடைந்த
வைத்திய கலாநிதி
**செல்வி பரமேஸ்வரி செல்லப்பா**

அவர்கட்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

*குறிப்பு:* அன்னாரின் புகழுடல் மருத்துவ சமூகத்தினது அஞ்சலிக்காக 12.05.2003 (திங்கட்கிழமை) மாலை 3 மணியளவில் மருத்துவ பீடத்திற்கு எடுத்துவரப்படும்.

(344) – மருத்துவ மாணவர் ஒன்றியம்.



MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# RAMCO CEMENT
# ராம்கோ சீமெந்து

*SLS - 107 அங்கீகாரம் பெற்றது*
*ISO - 9002 தரம் பெற்றது*
*BSS - 12 - 1991 தரத்திற்கு அமைவானது*

*ஆசியாவில் முதலாம்தர (நம்பர் 1) தொழிற்சாலையாகத் தெரிவு செய்யப்பட்ட தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் RAMCO சீமெந்து (கோபுர மார்க்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.*

குறிப்பு:- தற்பொழுது ராம்கோ சீமெந்து பருத்தித்துறை இறங்குதுறையில் இன்று தொடக்கம் (12.05.2003) இறக்கப்படவுள்ளது.

☆ *முன்கூட்டியே பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் நேரடியாக விநியோகிக்கப்படும்.*

☆ *மக்களின் பல இலட்சம் ரூபாய் பணத்தை மிச்சப்படுத்திய முதலாம் தர சீமெந்து ராம்கோ சீமெந்து*

ராம்கோ சீமெந்து ஏக இறக்குமதியாளர்கள்

**ஈஸ்வரபகவான் & கொம்பனி**

91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. NO: 021 - 2222350

(சி-925)


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.05.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.